பக்கங்கள்: 12 விலை : 30/-

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 05 வள்ளுவர் ஆண்டு 2051 மார்கழி 14 செவ்வாய்க்கிழமை 29.12.2020 கதிர் 54

### இது ரகசியம் அல்ல!

*'வேலிக்கு ஓணான் சாட்சி'*என்பார்கள். அப்படி ஒரு காரியம் யாழ்ப்பாணம் மேயர் தெரிவு தொடர்பாகக் கூட்டமைப்பை ஒட்டி அரங்கேறியிருக்கின்றது. அந்தத் தகவல் குறித்துக் கேள்விப்பட வெட்கமாகவும் இருக்கின்றது.

அந்த பக்கம்02 »

# கோட்டாபய அரசு திருந்தாவிடின் புதிய ஆண்டில் கவிழ்வது உறுதி



## சஜித் அணி பகிரங்க எச்சரிக்கை

2021ஆம் ஆண்டிலாவது கோட்டாபய அரசு திருந்த வேண்டும். நாட்டை மேம்படுத்த உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். இல்லையேல் இந்த அரசு புதிய ஆண்டில் கவிழ்வது உறுதி.

– இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார தெரிவித்தார்.

கொழும்பில் எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்தாவது:-

2021சுபீட்சமான ஆண்டாக அமையும் என்று ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ கூறுகின்றார். ஆனால், மக்களுக்கு மூன்று பக்கம் 02 »

## கொரோனா சாவு 194

இலங்கையில் கொரோனா வைரஸ் தாக்கத்தால் மேலும் மூவர் உயிரிழந்துள்ளனர் என்று அரச தகவல் திணைக்களம் அறிவித்துள்ளது.

இதன்படி நாட்டில் கொரோனாத் தாக்கத்தால் உயிரிழந்தவர்களின் பக்கம் 02 »

## நேற்றும் 549 கொரோனா தொற்று

இலங்கையில் நேற்றும் 549 பேர் கொரோனா வைரஸ் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இதன்படி நாட்டில் மொத்தத் தொற்றாளர்களின் எண்ணிக்கை 41 ஆயிரத்து 603 ஆக அதிகரித்துள்ளது.

கொரோனாவின் மூன்றாவது அலை மூலம் பக்கம் 02 »

# 60 வீத அரச நிறுவனங்கள் கட்டு மட்டில்லா நட்டத்தில்!

## நிதி மேலாண்மை அறிக்கையில் விவரிப்பு



கொழும்பு, டிசெம்பர் 28

இலங்கை அரசாங்கம் வெளியிட்டுள்ள இந்த ஆண்டுக்கான 'நிதி மேலாண்மை அறிக்கையின் படி' (Fiscal Management Report 2020 & 21), அரசுக்கு சொந்தமான 52 நிறுவனங்களில் 31 நிறுவனங்கள் இந்த ஆண்டின் முதல் 8 மாதங்களில் பெரு நட்டமடைந்து உள்ளன. அதாவது இலங்கை அரசாங்கத்திற்கு சொந்தமான 60 வீதமான நிறுவனங்கள் தோல்வியடைந்து இருக்கின்றன

குறிப்பாக அரச நிறுவனங்கள் மட்டும் முதல் 8 மாத காலப்பகுதியில் 10 ஆயிரத்து 447 மில்லியன் ரூபா நட்டமடைந்து இருக்கின்றன. 02 »

### பொன்னாலை வரதராஜர் ஆலய
# மகோற்சவத்தில் கலந்துகொண்ட பலர் கட்டாயத் தனிமைப்படுத்தல்

### சமூக இடைவெளியைப் புறந்தள்ளியமையால் வந்த வினை

(எஸ்.நிதர்ஷன்)

பொன்னாலை வரதராஜப் பெருமாள் ஆலயத்தில் நடைபெற்ற மார்கழி வைகுண்ட ஏகாதசி மகோற்சவத்தின்போது சமூக இடைவெளி பேணப்படவில்லை என்ற காரணத்தால் ஆலய திருவிழாவில் பங்குபற்றிய பலர் கட்டாயத் தனிமைப்படுத்தலுக்கு உள்ளாக்கப் பக்கம் 11 »

# மருதனார்மடம் கொத்தணி:

## 2ஆம் சுற்றுப் பரிசோதனையில் ஒருவருக்குக் கொரோனா உறுதி

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்.போதனா வைத்தியசாலையில் நேற்று 426 பேருக்கு மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில் ஒருவருக்குத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது என வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

உடுவிலை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவின் இணுவில் பகுதியைச் சேர்ந்த குறித்த தொற்றாளர் மருதனார்மடம் பொதுச் சந்தையிலுள்ள பக்கம் 02 »

## வல்லைப் பாலத்தினுள் வான் பாய்ந்ததில் இருவர் படுகாயம்

வடமராட்சி – வல்லைப் பாலத்தில் நேற்றுக் காலை கப் ரக வாகனம் பாய்ந்ததில் இருவர் படுகாயமடைந்துள்ளனர்.

வேகமாக வந்த பக்கம் 11 »

## மாகாணத் தேர்தல்களில் உரிய இடம் வழங்காவிட்டால் சு.க. தனி வழியில்!

### அதன் தலைவர் மைத்திரி குமுறுகின்றார்

மாகாண சபை தேர்தல்களில் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி



சமர்ப்பிக்கும் வேட்பாளர்களுக்குப் போட்டியிடுவதற்கு பொதுஜன பெரமுன பக்கம் 02 »




## ஊடகங்களை ஒடுக்குவதில் முழுமூச்சுடன் ராஜபக்ஷ அரசு

### சர்வாதிகார ஆட்சியின் உச்சம் என்கிறார் அநுரகுமார

ஊடகங்களை ஒடுக்குவதில் ராஜபக்ஷ அரசு முழுமூச்சுடன் செயற்படுகின்றது. இது சர்வாதிகார ஆட்சியின் உச்சக்கட்டத்தை வெளிக்காட்டுகின்றது. இதை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

– இவ்வாறு தேசிய மக்கள் சக்தியின் தலைவரும் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

அவர் மேலும் பக்கம் 02 »

## அரச பஸ் சாரதியின் சாதுரியத்தால் ஆபத்திலிருந்து மீண்ட பயணிகள்!!

வவுனியா ஏ – 9 பிரதான வீதியில் பேயாடிகூழாங்குளம் பகுதியில் மரம் முறிந்து விழுந்ததால் குறித்த வீதியூடான போக்குவரத்து ஒருமணி நேரம் தடைப்பட்டது. பக்கம் 02 »

## சவேந்திரவும் கமலும் ஜெனரல்களாகத் தரமுயர்வு

இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் சவேந்திர சில்வா, ஜெனரல் தரத்துக்கு உயர்த்தப்பட்டுள்ளார்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவால் இராணுவத் தளபதிக்கு இந்தத் தரமுயர்வு வழங்கப்பட்டுள்ளது.

இலங்கையின் பக்கம் 02 »

## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...

விடயத்துக்குள் இறங்க முதல் நாளை நடைபெறப்போகும் யாழ் மேயர் தெரிவை ஒட்டிய சில விடயங்களை அவதானிப்பது பொருத்தமானது.

மேயர் தெரிவு, உள்ளூராட்சி சபைத் தவிசாளர் தெரிவு ஆகியன தொடர்பில் கூட்டமைப்புக்குள் இருந்த கனவான் உடன்பாடு வெளிப்படையானது. கூட்டமைப்பின் பங்காளிக் கட்சி ஒன்றுக்கு ஒரு சபை ஒதுக்கப்படுகின்றபோது, அந்தப் பங்காளிக் கட்சியே அந்தச் சபையில் தனது சார்பில் தவிசாளராக அல்லது மேயராக நிற்க வேண்டியவரைத் தீர்மானிக்க வேண்டும். அப்படித்தான் இதுவரை நடந்தது.

அந்த வகையில் பார்த்தால் யாழ் மாநகரசபை மேயர் பதவி கூட்டமைப்பின் பிரதான பங்காளிக் கட்சியான இலங்கைத் தமிழரசுக்கு உரியது. அதில் தமிழரசு வேட்பாளராகக் களமிறங்க வேண்டியவர் யார் என்பதைத் தீர்மானிக்க வேண்டியவர்கள் தமிழரசினர்தான். அப்படி ஒரு தீர்மானத்தை எடுப்பதற்கு புளொட் சித்தார்த்தன், கஜதீபன், றெலோ செல்வம் போன்றோரை எல்லாம் கூட்டிவைத்து மாவை சேனாதிராசா ஆலாபனம் செய்ய வேண்டிய தேவை ஏதும் இல்லை.

மீண்டும் இமானுவேல் ஆர்னோல்ட்டை மேயராக்கும் திட்டத்தின் ஓர் அங்கம்தான் அப்படி பிற தரப்புகளை எல்லாம் கூட்டி வைத்து இலங்கைத் தமிழரசுக் கட்சித் தலைவர் மாவை சேனாதிராசா நடத்திய சபா.

அந்தக் கச்சேரியின் முடிவில் மாவையுடன் சேர்ந்த தரப்புகளின் விருப்பப்படி ஆர்னோல்ட்டையே மீளவும் மேயர் வேட்பாளராக களமிறக்கும் முடிவு எட்டப்பட்டு விட்டது என்பது உறுதியானது.

ஆனால், கூட்டமைப்பின் பேச்சாளர் சுமந்திரன் அந்தச் செய்தியை நம்பத் தயாராக இல்லை என்பது அவருக்கு நெருக்கமானவர்கள் மூலம் அறிய வந்தது.

*"மாவை அண்ணன்தான் என்னுடன் தொடர்பு கொண்டு மேயர் வேட்பாளராக சொலமன் சிறிலை நிறுத்துவோம் என்று கூறினார். நான் 'நல்லது, அப்படியே செய்யுங்கள்' என்று கூறினேன். சிறிதரன் எம்.பியும் அப்படித்தான் தன்னிடம் கூறியிருக்கின்றார் என்ற தகவலை மாவை அண்ணனே எனக்குத் தெரிவித்தார். சம்பந்தன் ஐயாவும் இது குறித்து என்னிடம் பேசினார். சிறிலை நிறுத்துவதற்கு மாவை அண்ணன் விரும்புகின்றார் என்ற தகவலை நான் சம்பந்தன் ஐயாவிடம் கூறினேன். 'அப்படியா, நல்லது. சிறிலுக்கு நாம் கொடுக்கத்தான் வேணும். நானும் அதனை மாவையிடம் கூறுகின்றேன்' என்று சம்பந்தன் ஐயா எனக்குத் தெரிவித்தார். ஆக சம்பந்தன் ஐயா, மாவை அண்ணன், சிறிதரன் எம்.பி., நான் என தமிழரசுக் கட்சியின் முக்கிய தலைவர்கள் எல்லோரும் இது விடயத்தில் ஒரே தீர்மானத்தில்தான் இருக்கிறோம். அத்துடன் இது தமிழரசுக் கட்சி விவகாரம். கட்சியின் தலைமை சிறிலை நிறுத்துவதையே விரும்புகின்றது. அத்துடன் மாவை அண்ணனே அதை என்னிடம் கூறியிருக்கின்றார். அந்த முடிவைத்தான் அவர் முன்னெடுப்பார் என்று நம்புகிறேன். பத்திரிகைகள் வேறு விதமாக எழுதினாலும் நான் அதை நம்புவதற்குத் தயாரில்லை. ஏனென்றால் இது விடயத்தில் ஓர் இறுதி முடிவு எடுக்க முன்னர் என்னுடன் தாம் பேசுவார் என மாவை அண்ணன் உறுதியாக எனக்குத் தெரிவித்திருக்கின்றார். எனவே என்னுடன் பேசியமைக்கு மாறாக, என்னிடம் அவர் கூறியமைக்கு மாறாக, புதிய முடிவு ஏதும் எடுக்கப்பட்டிருந்தால் நிச்சயம் மாவை அண்ணன் என்னுடன் பேசியிருப்பார். அவர் இதுவரைப் பேசவில்லை. ஆகையினால் முடிவில் மாற்றம் ஏதும் நடந்திருக்காது என்றே நான் நினைக்கிறேன்."*

– இப்படி சுமந்திரன் தனது வலது கை ஒருவருக்குத் தெரிவித்தார் என நான் மிக நம்பகரமாக அறிந்தேன்.

பாவம் சுமந்திரன். இன்னுமா மாவை சேனாதிராசாவை அவர் நம்புவது...?

இனி 'வேலிக்கு ஓணான் சாட்சி' என்ற விடயத்துக்கு வருவோம்.

அதற்கு முதல், இந்த விடயத்தில் சம்பந்தப்பட்ட சொலமன் சிறில் குறித்து அறிந்து கொள்ள வேண்டும். புலிகள் இயக்கத்தின் முடிவு வரை அந்த இயக்கத்தோடு பயணித்தவர் சிறில். கூட்டமைப்பு எம்.பியாகவும், புலிகளின் தீவிர ஆதரவாளராகவும் இருந்த சிவநேசன் வன்னியில் ஆள ஊடுருவும் படையின் கிளைமோர்த் தாக்குதலில் கொல்லப்பட்ட பின்னர், தமது பாதுகாப்பை ஆபத்தில் ஆழ்த்தி, அந்த இடத்துக்கு வன்னியிலிருந்து எம்.பியாகச் சென்று பணியாற்றியவர் சிறில். விடுதலைப் புலிகளுக்காக நாடாளுமன்றத்திலும் முழங்கியவர். புலிகளால் மெத்தச் சிலாகிக்கப்பட்டவர்.

அவரை வெட்டி, மேயர் பதவிக்கு ஆர்னோல்ட்டை மீண்டும் நிறுத்தும் தமிழரசுக் கட்சியின் தலைமை, அதற்கு ஆதரவு தருமாறு ஈ.பி.டி.பியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தாவுக்கு ஓர் இரகசியத் தூது அனுப்பியிருக்கின்றது. யார் தெரியுமா அந்தத் தூதுக் குழுவினர்?

முன்னர் போராளிகளுடன் இயங்கிய சிறிலை வெட்டி, ஆர்னோல்ட்டையே தொடர்ந்து மேயராக வைத்திருப்பதற்கு தமிழரசின் சார்பில் அமைச்சர் டக்ளஸிடம் தூது சென்றவர்கள் இன்னொரு போராளிகள் தரப்பினர். ஜனநாயகப் போராளிகள் கட்சியின் செயலாளர் கதிரும் அதன் பேச்சாளர் துளசியும்தான்.

போராளிகளுடன் நின்ற ஒருவரை வெட்டி ஒதுக்குவதற்கு போராளிகளையே பயன்படுத்தும் தந்திரத்தைத் தான் வேலிக்கு சாட்சி ஓணான் என்றேன்.

சரி. இந்தத் தூதுக் குழுவினருக்கு அமைச்சர் டக்ளஸ் என்ன பதில் சொல்லி அனுப்பினார்?

*"சும்மா எல்லாம் தூது வராதீர்கள். உத்தியோக பூர்வமாக தமிழரசு – கூட்டமைப்பு – தலைமை எங்களிடம் எழுத்தில் கோரட்டும். சம்பந்தனும் மாவையும் ஒப்பமிட்டு எங்களிடம் கேட்டால் அதனை நாங்கள் சாதகமாகப் பரிசீலிக்கலாம். அதை விடுத்து பின்கதவுப் பேரங்கள் வேண்டாம்."* – என்று தெளிவாகவும் உறுதியாகவும் கூறி கதிரையும் துளசியையும் அனுப்பி வைத்தார் அமைச்சர் டக்ளஸ் என்பதை உறுதி செய்ய முடிந்தது.

சரி இவ்வளவும் நடந்து விட்டது. நாளை நிலைமை என்ன?

மாவை தன்னைத் திருத்தி, முடிவை மாற்றாவிட்டால் –

சிறிலை வெட்டி, ஆர்னோல்ட்டைத் தான் இறக்குவது என்ற தனது குறுக்குப் புத்தி முடிவில் அவர் தீர்க்கமாக இருந்தால் –

மேயர் தேர்வில் நேரடிப் போட்டி ஆர்னோல்ட்டுக்கும் சட்டத்தரணி மணிவண்ணனுக்கும் இடையில் நடப்பது தவிர்க்க முடியாததாக இருக்கும். அதில் மணிவண்ணனின் வெற்றியும் தமிழரசுக் கட்சியின் தோல்வியும் கூட மாவை அணியின் தவறான அரசியல் முடிவால் தவிர்க்க முடியாததாக இருக்கலாம்.

இதைத்தான் *'கெடுகுடி சொற்கேளாது'* என்பரோ.....?

– மின்னல் –

## மருதனார்மடம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...

வர்த்தக நிலையத்தில் பணியாற்றுபவர் எனவும் அவர் குறிப்பிட்டார்.

முதற்சுற்று பரிசோதனையில் அவருக்குக் கொரோனாத் தொற்று இல்லை எனவும், இரண்டாம் சுற்றுப் பரிசோதனையிலேயே கொரோனா உறுதி செய்யப்பட்டுள்ளது எனவும் அவர் மேலும் கூறினார்.

இதேவேளை, யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட பரிசோதனைக் கூடத்தில் நேற்று நல்லூர், சாவகச்சேரி, சங்கானை பிரதேசங்களைச் சேர்ந்த 240 பேருக்கு மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில் எவருக்கும் தொற்று இல்லை என்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

## சவேந்திரவும் கமலும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...

23 ஆவது இராணுவத் தளபதியாக 2019 ஆம் ஆண்டு ஓகஸ்ட் 19ஆம் திகதி சவேந்திர சில்வா பதவியேற்றார். அதன் பின்னர் அவர், சிறப்புப் படையணி மற்றும் பாதுகாப்பு பிரதானி செயல் தளபதியாகவும் இவ்வருடம் ஜனவரி மாதம் 2ஆம் திகதி நியமிக்கப்பட்டார்.

இதேவேளை, இலங்கையின் கொரோனாத் தடுப்புக்கான தேசிய செயலணியின் பிரதானியாகவும் சவேந்திர சில்வா பதவி வகிக்கின்றார்.

அத்துடன் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கமல் குணரத்னவுக்கும் ஜனாதிபதியால் தரமுயர்வு வழங்கப்பட்டுள்ளது.

இதன்படி மேஜர் ஜெனரல் தரத்தில் இருந்து ஜெனரலாக கமல் குணரத்ன தரமுயர்த்தப்பட்டுள்ளார்.

## கொரோனா சாவு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...

எண்ணிக்கை 194 ஆக அதிகரித்துள்ளது.

இவர்களில் 181 பேர் கொரோனாவின் மூன்றாவது அலையில் உயிரிழந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## 60 வீத அரசு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...

அந்த வகையில் இலங்கை மின்சார சபை, இலங்கை பெட்ரோலிய கூட்டுத்தாபனம் இலங்கை போக்குவரத்து சபை, ஸ்ரீ லங்கன் விமான சேவை, சதொசா, அரச பொறியியல் கூட்டுத்தாபனம், HDFC வங்கி மற்றும் அரசுக்கு சொந்தமான தொலைக்காட்சி நிறுவனங்களான ரூபாவாஹினி மற்றும் ITN ஆகியவையே பெரும் நட்டத்தை அடைந்த நிறுவனங்களின் பட்டியலில் அடங்கி இருக்கின்றன

ராஜபக்ஷ குடும்பம் ஆட்சிக்கு வந்த பின்னர் ராஜபக்ஷ குடும்பத்திற்கு நெருக்கமான கலிபோர்னியா வாழ் நண்பர்கள், ராஜபக்ஷ குடும்ப உறவினர்கள் மற்றும் இராணுவ அதிகாரிகள் என ராஜபக்ஷக்களுக்கு நெருக்கமான பலர் அரச நிறுவனங்களின் பதவிகளுக்கு நியமிக்கப்பட் டனர். கல்வித் தகைமை, தொழில் தகைமை, அனுபவம் என அடிப்படை விடயங்கள் கவனத்தில் கொள்ளப்படாமல் தனிப்பட்ட இலக்குகளை முன் நிறுத்தி நியமனங்கள் செய்யப்பட்டன. இவ்வாறு தகுதியற்றவர்களின் கைகளில் ஒப்படைக்கப்பட்ட நிறுவனங்கள் வெறும் 8 மாதங்களில் பாரிய இழப்பை சந்தித்து இருக்கின்றன .

## மாகாணத் தேர்தல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...

இடமளிக்காத பட்சத்தில் கட்சி தனித்து போடியிட வேண்டியிருக்கும் என முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன எச்சரித்துள்ளார்.

நாடாளுமன்ற தேர்தலின் போது எங்களுக்குப் பெரும் அநீதி இழைக்கப்பட்டது. இம்முறை எங்களை நியாயமான முறையில் நடத்தாவிட்டால் எங்கள் கட்சியின் உறுப்பினர்கள் அதனை ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். அவர்கள் நெருக்கடி தருவார்கள்.

எங்கள் வேண்டுகோள்கள் செவிமடுக்கப்படாவிட்டால் பிரிந்துசெல்ல தீர்மானித்துள்ளோம்.

அத்தோடு பொதுதேர்தலின் போது சிலமாவட்டங்களில் எங்கள் கட்சியினருக்கு போட்டியிடுவதற்கு வாய்ப்பளிக்கப்படவில்லை.

களுத்துறை, நுவரெலியாவில் எவருக்கும் வாய்ப்பளிக்கப்படவில்லை. கம்பஹாவில் வெற்றிபெறக்கூடிய எங்கள் வேட்பாளர்களில் ஒருவருக்கே வாய்ப்பளிக்கப்பட்டது.

நாங்கள் சமர்ப்பித்த வேட்பாளர்களை ஏற்றுக்கொண்டிருந்தால் நாடாளுமன்றத்தில் 25 உறுப்பினர்கள் எங்களுக்கு தற்போது கிடைத்திருப்பர். ஆனால் இப்போது 14 உறுப்பினர்களே உள்ளனர்.

தமிழர் பிரச்சினைகளிற்கு தீர்வை காண்பதன் ஒரு பகுதியாகவே மாகாண சபைகள் உருவாக்கப்பட்டன. இந்திய – இலங்கை உடன்படிக்கையின் அடிப்படையில் 13 ஆவது திருத்தம் உருவானது.

நாங்கள் நாட்டை அபிவிருத்தி செய்வதற்கு 13 திருத்தம் உதவியுள்ளதா என்பது குறித்து பார்க்கவேண்டும், மாகாணசபை முறை குறித்து உரிய ஆய்வுகள் இடம்பெறவில்லை என்றே கருதுகின்றேன்.

30 வருடங்களுக்குப் பின்னரும் மாகாண சபை முறை வெற்றியா? தோல்வியா? என்பதை நாங்கள் இன்னமும் உறுதிசெய்யவில்லை.

மாகாண சபை முறைக்காகச் செலவிடப்படும் நிதி குறித்தும் கேள்விகள் எழுகின்றன. நாங்கள் எதிர்பார்த்த எதுவும் மாகாணசபை முறையிலிருந்து கிடைக்கவில்லை என்பதே எனது கருத்து. – எனவும் மைத்திரிபால சிறிசேன மேலும் தெரிவித்துள்ளார்.

## ஊடகங்களை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...

தெரிவித்ததாவது:–

பிரபாகரனின் பெயரை நாடாளுமன்றத்தில் ஆளுந்தரப்பினரே அதிகளவில் உச்சரித்து வருகின்றனர். இந்நிலையில், பிரபாகரனின் பிறந்த தினமன்று அவரின் படத்துடன் செய்தி வெளியிட்டமைக்காக 'உதயன்' மீது பொலிஸார் வழக்குத் தாக்கல் செய்துள்ளனர்.

பத்திரிகைச் சுதந்திரம் மீது கைவைப்பதற்குப் பொலிஸாருக்கு எந்த அதிகாரமும் இல்லை. அந்த அதிகாரத்தைப் பொலிஸாருக்கு வழங்கவும் இந்த அரசுக்கு அனுமதியில்லை.

பத்திரிகைகள் உள்ளிட்ட ஊடகங்களை ஒடுக்குவதில் இந்த அரசு முழுமூச்சுடன் செயற்படுகின்றது. இதற்கு நாம் ஒரு போதும் அனுமதி வழங்கமாட்டோம் – என்றார்.

## நேற்றும் 549...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...

இதுவரையில் 37 ஆயிரத்து 890 பேருக்கு வைரஸ் தொற்றியுள்ளது.

மொத்தத் தொற்றாளர்களில் 33 ஆயிரத்து 221 பேர் குணமடைந்துள்ளனர். 8 ஆயிரத்து 188 பேர் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

## கோட்டாபய அரசு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...

வேளை உண்பதற்குக் கூட உணவு கிடைக்குமா என்பது சந்தேகமாகும்.

கொரோனாத் தடுப்பூசி கண்டுபிடிக்கப்படாவிட்டாலும் உலக நாடுகள் அவற்றை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுத்துள்ளன. ஆனால், இலங்கையில் கொரோனாப் பாணியை வைத்து மக்களை ஏமாற்றிக் கொண்டிருக்கின்றனர்.

வியத்மக அமைப்பிலுள்ள பலருக்கும் அமைச்சு பதவி வழங்கப்பட்டுள்ளது. இவ்வாறான நிலைமைக்குள் நாட்டை சுபீட்சமுடையதாக்க முடியுமா? முதலீட்டாளர்கள் எவ்வாறு நாட்டில் நம்பிக்கை வைத்து முதலீடுகளை மேற்கொள்வார்கள்? இவ்வாறான நெருக்கடிகளுக்கு மத்தியில் பலருக்கும் தொழில் வாய்ப்புக்களும் அற்றுப்போயுள்ளன.

இதேபோக்கில் வெளிநாட்டு கொள்கைகளிலும் நாடு முறையற்ற விதத்தில் செல்லுமாயின் எதிர்காலத்தில் ஜி.எஸ்.பி. பிளஸ் சலுகையும் அற்றுப்போகும் என்ற சந்தேகம் ஏற்படுகின்றது. பொருளாதாரம் இவ்வாறு வீழ்ச்சியடைந்து கொண்டு செல்கின்ற நிலையில் சேனா படைப்புழுவும் விவசாயிகளை நெருக்கடிக்கு உள்ளாக்குகின்றது.

இவ்வாறான நிலையில், 2021ஆம் ஆண்டிலாவது கோட்டாபய அரசு திருந்த வேண்டும். நாட்டை மேம்படுத்த உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். இல்லையேல் இந்த அரசு புதிய ஆண்டில் கவிழ்வது உறுதி – என்றார்.

## அரச பஸ் சாரதி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...

குறித்த பகுதியில் நின்றிருந்த பழமையான புளியமரம் நேற்றிரவு 8 மணியளவில் வேரோடு சாய்ந்து மின்கம்பத்தையும் சேதப்படுத்திக்கொண்டு ஏ – 9 பிரதான வீதியின் குறுக்காக விழுந்தது.

அவ்வேளையில் அவ்வீதியால் யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு நோக்கிப் பயணிகளை ஏற்றிக்கொண்டு அரச பஸ் ஒன்றும் பயணித்திருந்தது. எனினும், மரம் முறிந்து விழுவதை அவதானித்த பஸ்ஸின் சாரதி விரைந்து செயற்பட்டு பஸ்ஸை வீதியின் கரையால் கொண்டு சென்றமையால் பாரிய அசம்பாவிதம் தவிர்க்கப்பட்டது.

சம்பவ இடத்துக்குச் சென்ற பொலிஸார் மற்றும் இராணுவத்தினர் மரத்தை வெட்டி அகற்றும் பணியில் ஈடுபட்டனர்.

குறித்த விபத்தால் ஏ – 9 வீதியுடனான போக்குவரத்து நேற்றிரவு ஒரு மணிநேரம் தாமதமடைந்திருந்தது.

இதேவேளை, வவுனியாவில் கடந்த சில நாள்களாக மழையுடனான கால நிலை நீடித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# கனியவள மண் அகழ்விற்கு எதிர்ப்பு தெரிவித்து மன்னாரில் போராட்டம்!





**ந.லோகதயாளன்**
மன்னார், நவ.29

மன்னாரில் ஆஸ்திரேலியா நாட்டைத் தளமாகக் கொண்ட நிறுவனமொன்று கனியவள மண் அகழ்விற்கான ஆய்வை முடித்து, தற்போது மண் அகழ்வு செய்வதற்கான நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றது.

இந்நிலையில் இந்த கனிய வள மண் அகழ்வுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் மன்னார் பிரஜைகள் குழுவின் ஏற்பாட்டில் மன்னாரின் சுற்றுச் சூழலை பாதுகாக்கும் அமைப்பும் இணைந்து மன்னார் நகர பஸ் தரிப்பிடத்துக்கு முன்பாக நேற்று (திங்கட்கிழமை) காலை 11 மணியளவில் குறித்த கண்டன போராட்டத்தை முன்னெடுத்துள்ளன.

இந்த கண்டன போராட்டத்தில் சர்வ மத தலைவர்கள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், பெண்கள் அமைப்பின் பிரதிநிதிகள் என பலர் கலந்து கொண்டிருந்தனர்.

மேலும் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் பல்வேறு வசனங்கள் எழுதப்பட்ட பதாதைகளை ஏந்தியவாறு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

குறிப்பாக மன்னாரின் சுற்றுச் சூழலை பாதுகாக்க அனைவரும் ஒன்றிணைவோம், கடலில் தாழும் மன்னார் தீவை பாதுகாப்போம், வெள்ளம் வரும் முன்னர் அணைகட்டுவோம் உள்ளிட்ட வசனங்கள் எழுதப்பட்ட பதாதைகளை ஏந்தியவாறு அவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதன்போது கனிய வள மண் அகழ்விற்கு எதிராக கையெழுத்து பெற்றுக்கொள்ளப்பட்டது.

குறித்த கண்டன போராட்டத்தை தொடர்ந்து ஜனாதிபதிக்கு மகஜர் கையளிக்கும் வகையில் மன்னார் மாவட்ட அரசாங்க அதிபரிடம் மகஜர் வழங்கி வைக்கப்பட்டது.

இந்தக் கண்டன போராட்டத்தில் கலந்து கொண்டவர்கள் சமூக இடைவெளியை பேணி, சுகாதார நடைமுறைகளுக்கு அமைவாக கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## வடமத்திய மாகாண முதல்வரின் அலுவலகம் கொரோனாவால் பூட்டு!

கொரோனா தொற்று உறுதியான ஒருவர் அடையாளம் காணப்பட்டமையை அடுத்து வட மத்திய மாகாண முதல்வரின் அலுவலகம் நேற்று (திங்கட்கிழமை) முதல் தற்காலிகமாக மூடப்பட்டுள்ளது.

இந்நிலையில் தொற்று உறுதியானவருடன் தொடர்புடைய அனைவருக்கும் பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளப்படும் என முதலமைச்சர் அலுவலகம் அறிவித்துள்ளது.

மேலும் முதல்வரின் அலுவலக வளாகத்தில் கிருமி நீக்கம் செய்யும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

அத்தோடு அடுத்த இரண்டு அல்லது மூன்று நாள்களில் மீண்டும் அன்றாட நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

## பிரித்தானியாவில் இருந்து வந்த இருவருக்குத் தொற்று!

இலங்கையில் கண்டறியப்பட்ட கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டவர்களில் பிரித்தானியாவில் இருந்து வருகை தந்தவர்களும் அடங்குகின்றனர் என அறிவிக்கப்பட்டுள்ளது.

நேற்று (திங்கட்கிழமை) காலை 6 மணியுடன் முடிவடைந்த 24 மணி நேர காலப்பகுதியில் வெளிநாட்டில் இருந்து நாடு திரும்பிய ஆறு பேருக்கு தொற்று உறுதியானதாக கொரோனா தடுப்பிற்கான தேசிய செயற்பாட்டு மையம் தெரிவித்துள்ளது.

இந்நிலையில் குறித்த 6 பேரில் இருவர் புதியவகை கொரோனா தொற்று அடையாளம் காணப்பட்டுள்ள பிரித்தானியாவில் இருந்து வருகை தந்துள்ளனர்.

அத்தோடு கொரோனா தொற்று உறுதியான மற்றைய நோயாளிகள் மத்திய கிழக்கு மற்றும் இத்தாலியைச் சேர்ந்தவர்கள் என அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த வாரம், பிரித்தானியாவில் இருந்து நாடு திரும்பிய பயணிகள் மற்றும் பணியாளர்கள் விசேட ஹோட்டலில் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

பிரித்தானியாவில் கொரோனா தொற்றின் மாறுபாடு கண்டறியப்பட்ட பின்னர் அங்கிருந்து நாட்டுக்குள் வரும் விமானங்களை நிறுத்திவைக்கவும், அந்நாட்டில் இருந்து பயணிகளை அனுப்பும் நடவடிக்கையையும் நிறுத்தி வைக்கவும் அரசாங்கம் முடிவு செய்தது.

இருப்பினும் நாட்டுக்கு பயணிகளை அழைத்துவரும் நடவடிக்கையின் ஒரு பகுதியாக ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் விமானம் பிரித்தானியாவிற்கு அனுப்பப்பட்டது.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ இந்த முடிவை அறிவித்த நேரத்தில் இலங்கை விமானம் ஏற்கனவே பிரித்தானியாவிற்கு சென்றிருந்ததாக இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் விமானம் கடந்த புதன்கிழமை நாடு திரும்பியதாகவும் இராணுவத் தளபதி தெரிவித்தார்.

## அருட்தந்தை ஜேம்ஸ் பத்திநாதருக்கு முல்லைத்தீவில் உருவச்சிலை திறப்பு




மக்கள் சேவையே மகேசன் சேவை என வாழ்ந்து கடந்த 2019 ஆம் ஆண்டு நடுப்பகுதியில் அமரத்துவமடைந்த அருட் தந்தை ஜேம்ஸ் பத்திநாதர் அடிகளாருக்கு முல்லைத்தீவு மறை மாவட்டத்தில், அவர் நீண்டகாலம் இறைபணியை தொடர்ந்த பிரதேசத்தில் திருவுருவச்சிலை நிர்மாணிக்கப்பட்டது.

சுனாமி அனர்த்தத்தில் உயிரிழந்தோரை நினைவு கூரும் வேளையில், சுனாமி கடற்கோள் காலத்தில் அவர் தீவிர அர்ப்பணிப்புடன் மக்களுக்கு சேவை யாற்றிய பகுதியிலேயே இச்சிலை நிறுவப்பட்டிருப்பதும் குறிப்பிடத்தக்கது.

முல்லைத்தீவு சுனாமி நினைவாலய வளாகத்தில், முல்லைத்தீவு மறைக்கோட்ட குரு முதல்வர் அருட்தந்தை யாவிஸ் அடிகளார் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் இந்தப்பிரதேச மக்களும் அருட்தந்தைமாரும் அருட்சகோதர, சகோதரிகளும் கலந்துகொண்டனர்.

யாழ். மறைமாவட்ட குரு முதல்வர் அருட்தந்தை ஜோசப் ஜெபரட்ணம் அடிகளார் இந்நிகழ்வில் உரையாற்றுகையில் –

அருட்தந்தை ஜேம்ஸ் பத்திநாதரின் முகம் எப்பொழுதும் ஏழை மக்கள் மீது இரக்கசிந்தனையை வெளிப்படுத்திக்கொண்டிருக்கும். அவ்வாறே இன்று இங்கு நிறுவப்படும் திருவுருவச்சிலையின் முகத்தோற்றமும் பொலிவுபெற்றிருக்கிறது. சுனாமி கடற்கோள் அனர்த்தின் பின்னர் இந்தப்பிரதேச மக்களின் மீள் கட்டுமானத்தில் தனது அக்கறையை காண்பித்து, மக்களின் புனர்வாழ்வுக்கு உதவிய பெருந்தகை அவர்.

அதற்கான நன்றியின் வெளிப்பாடாகத்தான் அன்னாரின் திருவருவச்சிலை இங்கே அமைகிறது.

இச்சந்தர்ப்பத்தில் ஒரு முக்கிய தகவலையும் தெரிவிக்கவேண்டும். அன்று சுனாமி ஆழிப்பேரலை அனர்த்தம் நிகழ்ந்தபோது அவரது முன்னெச்சரிக்கையான செயற்பாடுகளினால் பலரது உயிர்கள் காப்பாற்றப்பட்டன. வழமையாகத் திருப்பலி நடக்க வேண்டிய ஆலயத்தில் அதனை அன்று நடத்தாமல் வேறு ஓர் ஆலயத்தில் அவர் அதனை நடத்தியதன் மூலம் பலர் உயிர்தப்பினார்கள்.

அருட்தந்தை ஜேம்ஸ் பத்திநாதர் அவர்கள் நினைவுகளாக என்றும் எம்முடனும், எந்த மக்களுக்காக அவர் வாழ்ந்தாரோ அம்மக்களின் நினைவுகளுடன் வாழ்ந்துகொண்டிருப்பார்.– என்று குறிப்பிட்டார்.

## வெள்ளவத்தையில் பிரபல வங்கி பூட்டு!

கொழும்பு – வெள்ளவத்தையில் இயங்கும் பிரபல வங்கியொன்று நேற்று (திங்கட்கிழமை) காலை முதல் மூடப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த பிரபல தனியார் வங்கியின் ஊழியர் ஒருவருக்கு கொரோனா தொற்றிருப்பது கண்டறியப்பட்டுள்ளது. இதனையடுத்து குறிப்பிட்ட வங்கிக் கிளை நேற்று காலை அதிரடியாக மூடப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து, வங்கியின் ஏனைய ஊழியர்களுக்கும் பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

## 195 இலங்கையர் நாடு திரும்பினர்!

கொரோனா வைரஸ் பரவல் காரணமாக வெளிநாடுகளில் சிக்கியிருந்த 195 இலங்கையர்கள் நேற்று (திங்கட்கிழமை) நாடு திரும்பியுள்ளனர்.

அதனடிப்படையில் ஐக்கிய அரபு இராச்சியத்தில் இருந்து 150 பேரும் இந்தியாவில் இருந்து 18 பேரும் கட்டாரில் இருந்து 16 பேரும் இவ்வாறு நாடு திரும்பியுள்ளனர்.

அத்துடன் மாலைதீவில் இருந்து 5 பேரும் பாகிஸ்தானில் இருந்து நான்கு பேரும் சவுதி அரேபியாவில் இருந்து இருவரும் நாட்டை வந்தடைந்துள்ளனர்.

நாட்டை வந்தடைந்த அனைவரும் பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டு தனிமைப்படுத்தல் முகாம்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## தமிழரும் சுயநிர்ணயமும்

*"ஒரு மக்கள் கூட்டத்துக்கு உள்ளக சுயநிர்ணய உரிமை தொடர்ந்து மறுக்கப்படுமானால் அவர்கள் சர்வதேச சட்டத்தின் கீழ் வெளிப்புற சுயநிர்ணய உரிமைக்கு உரித்துடையவர்கள் என்பதை நினைவு படுத்துகிறோம்."* – என்று அரசுக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தெரிவித்திருக்கின்றது.

புதிய அரசமைப்பு உருவாக்கத்துக்காகத் தான் சமர்ப்பித்த யோசனைத் திட்டத்திலேயே கூட்டமைப்பு இதனைத் தெரிவித்திருக்கின்றது.

புதிய அரசமைப்பு உருவாக்கத்துக்கு தமிழ்த் தேசியத்தை வலியுறுத்தும் தரப்புகளான கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தின் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி, நீதியரசர் சி.வீ.விக்னேஸ்வரனின் தமிழ் மக்கள் தேசியக் கூட்டணி ஆகியவை சமர்ப்பித்த – அல்லது சமர்ப்பிக்கப் போகின்ற – யோசனைத் திட்டங்களும் கூட இந்த வலியுறுத்தலுக்குக் குறைந்தவையாக இருக்கப் போவதில்லை என்பது கண்கூடு.

வெளிப் பார்வைக்கு இந்தச் சொல்லாடல் அரசியல் ரீதியில் அழகான அடுக்கு மொழிகளைக் கொண்டிருந்தாலும் அதற்குள் உள்கிடையாகக் பொதிந்து கிடக்கும் அர்த்தப் பரிமாணம் ஆழமானது.

இந்த வாசகத்தின் அர்த்தத்தை வெட்டு ஒன்று துண்டு இரண்டாகக் கூறுவது என்றால் –

*"சமஷ்டித் தீர்வை மறுப்பீர்களாயின் சர்வதேசச் சட்டங்களின் படி நாம் பிரிவினையை – தனிநாட்டை – கோரும் நிலைக்குத் தள்ளப்படுவோம்"* – என்பதுதான் இதன் நேரடி அர்த்தமாகும்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அரசியல் கருத்தியலை – நிலைப்பாட்டை – அண்மைக் காலம் வரை வெளிப்படையாகப் பேசி வந்த கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனும், பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரனும் ஒரு விடயத்தைத் திரும்பத் திரும்ப – வலிந்து – குறிப்பிட்டு வந்தார்கள்.

*'ஒன்றுபட்ட, பிரிக்க முடியாத, பிளவுபடாத இலங்கைக்குள் தீர்வு'* என்பதுதான் அது.

அத்தகைய விடயத்தைத் தேடித் தேடி வலியுறுத்திய கூட்டமைப்பினர் இப்போது *'சமஷ்டித் தீர்வு இன்றேல் பிரவினை குறித்தும் நாம் சிந்திக்க வேண்டிய வரும்'* என்ற நிலைப்பாட்டை எழுத்தில் – யோசனைத் திட்டமாக – முன்வைக்கும் நிலைமை ஏற்பட்டுள்ளது.

இதற்கு இரண்டு காரணங்கள் இருக்கலாம்.

ஒன்று – ஐக்கிய, பிரிக்கப்படாத, பிளவுபடாத நாட்டுக்குள் தீர்வு என்றளவுக்குக் கீழிறங்கி வந்த தமிழர்கள், பேரினவாதத்தினால் அவமானப்படுத்தப்பட்டு, புறமொதுக்கப்பட்டு, ஏமாற்றப்பட்டு, கீழ் நிலைப்படுத்தப்பட்டு விட்டார்கள் என்ற ஆதங்கத்தில் – அல்லது சீற்றத்தில் – எழுந்த நிலைப்பாடாக இது இருக்கலாம்.

அடுத்தது – தமக்குப் போட்டியாக தமிழர் தேசிய அரசியலில் எழுச்சி பெற்று வரும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியும், தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியும் சுயநிர்ணய உரிமையின் அடிப்படையிலான தீர்வு யோசனையை முன்வைக்க, தாம் மட்டும் வெறுமனே சமஷ்டித் தீர்வு என்று கேட்டால், தங்களது தமிழ் மக்கள் மத்தியிலேயே தாங்கள் அரசியல் ரீதியில் அடிபட்டு, செல்வாக்கிழந்து போகும் ஆபத்து எழுந்து விடலாம் என்ற முன்னெச்சரிக்கை உணர்வு காரணமாக இந்தத் கோரிக்கையை – சுயநிர்ணயம் பற்றிய வலியுறுத்தலை – அவர்கள் முன்வைத்திருக்கலாம்.

எது, எப்படி என்றாலும் தமிழ்த் தேசியத்தை வலியுறுத்தும் கட்சிகளில் மற்றைய இரண்டு தரப்புகளான கஜேந்திரகுமாரின் முன்னணி, விக்னேஸ்வரின் கூட்டணி போல நேரடியாக உள்ளக, வெளிப்புற சுயநிர்ணய உரிமைகளை வலியுறுத்தாமல், அப்படி கோருவதற்கான உரித்துடையவர்கள் தமிழர்கள் என்பதை நினைவூட்டுவதுடன் தனது யோசனைத் திட்டத்தைக் கூட்டமைப்பு முன்மொழிந்திருக்கின்றது.

அதில் உள்ள நியாயத்தை ராஜபக்ஷவின் ஆட்சிப் பீடமும், சிங்களப் பேரினவாதமும் புரிந்து கொள்ளப் போவதில்லை. பேரினவாத வெறி அவர்கள் கண்களை மறைத்தே இருக்கும் என்பதால் இந்த யோசனைத் திட்டம் மூலம் தமிழர்கள் – கூட்டமைப்பு – தனிநாடு அமைக்கப் போகின்றனர் என்று தெற்கில் கூப்பாடு போடப்போவது என்னவோ நிச்சயம்தான்.

1970 இல் ஐ.நா வெளியிட்ட புதிய பிரகடனத்தின் பிரகாரம் –

*"ஐ.நா. சாசனத்தில் பொறிக்கப்பட்டிருக்கும் 'சம உரிமைகளும் மக்களது சுயநிர்ணயமும்' என்ற விதிக்கு இணங்க, எல்லா மக்களும் (Peoples) வெளிப்புறத் தலையீடு எதுவுமின்றி, தமது அரசியல் தகைமையைச் சுதந்திரமாகத் தீர்மானிப்பதற்கும், தமது பொருளாதார, சமூக, கலாசார வளர்ச்சியைப் பேணுவதற்கும் உரிமை உடையவர்கள். இந்த சாசனத்தின் கட்டுப்பாடுகளுக்கு அமைய ஒவ்வொரு அரசும் இந்த உரிமைக்கு மதிப்பளிக்கக் கட்டுப்பட்டிருக்கின்றது."*

– ஐ.நாவின் இந்தப் பிரகடனம், உள்ளக, வெளிப்புற சுயநிர்ணய உரிமைகளைத் தெளிவாக வேறுபடுத்திக் காட்டுகின்றது. அதனடிப்படையில் உரிமை கோரும் தகுதி கொண்டது ஈழத் தமிழினம் என்பதை சிங்களத்துக்குப் புரிய வைப்பதுதான் இயலாத விவகாரமாக உள்ளது.

# 994 ஆக எகிறியது கிழக்கு தொற்றாளர்!

## மாகாண சுகாதாரப் பணிப்பாளர் தகவல்

கிழக்கு மாகாணத்தில் இதுவரையில் 994 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக அந்த மாகாண சுகாதாரப் பணிப்பாளர் வைத்தியர் அழகையா லதாகரன் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு மாவட்ட பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர் அலுவலகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனை குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது அழகையா லதாகரன் மேலும் கூறியுள்ளவை வருமாறு:–

பேலியகொட மீன்சந்தை கொத்தணியின் பின்னர் ஞாயிறு காலைவரை மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர்., அன்டிஜன் பரிசோதனைகளின் பிரகாரம் 994 பேர் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளார்கள்.

அந்தவகையில் மாவட்டங்கள் வாரியாக பார்க்கின்றபோது திருகோணமலை மாவட்டத்தில் 122 பேரும், மட்டக்களப்பு மாவட்டத்தில் 131 பேரும், அம்பாறை மாவட்டத்தில் 24 பேரும், கல்முனை பிராந்தியத்தில் 717 பேரும் என மொத்தமாக 994 பேர் கொரோனா வைரஸ் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளார்கள்.

கொவிட் தொற்று ஏற்பட்ட காலத்திலிருந்து இன்றுவரை கிழக்கு மாகாணத்தில் மொத்தமாக 528 பேர் குணமடைந்துள்ளார்கள். 485 பேர் தொடர்ச்சியாக சிகிச்சை பெற்றுவருகின்றார்கள். 5 மரணங்கள் நிகழ்ந்துள்ளன. 5 மரணங்களில் 4 மரணங்கள் கல்முனை பிராந்தியத்திலும் ஒரு மரணம் மட்டக்களப்பு மாவட்டத்தின் காத்தான்குடி பகுதியிலும் பதிவாகியுள்ளது.

பேலியகொட மீன்சந்தை கொத்தணியின் பிற்பாடு இதுவரை வைத்தியசாலைகளில் 2 ஆயிரத்து 268 பேர் உள்வாங்கப்பட்டு சிகிச்சையளிக்கப்பட்டிருக்கின்றனர். அவர்களுள் 1,763 பேர் பூரண குணமடைந்து சென்றுள்ளனர். 11 பேரை நாங்கள் இடமாற்றியுள்ளோம். – எனக் குறிப்பிட்டுள்ளார்.

## பொலிஸ் காவலிலிருந்த நபர் ஒருவர் உயிரிழப்பு

வெயாங்கொடவில் இன்று காலை பொலிஸ் அதிகாரிகளுடன் ஏற்பட்ட மோதலில் பல குற்றங்களுடன் தொடர்புடைய 37 வயதான நபர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

மேற்படி நபர் கொலை சம்பவத்துடன் தொடர்புடைய என்ற குற்றச்சாட்டின் கீழ் கடந்த 19 ஆம் திகதி கைதுசெய்யப்பட்டார்.

பொலிஸ் அதிகாரிகள் இன்று காலை குறித்த நபரை வெயாங்கொடவில் உள்ள ஓர் இடத்திற்கு அழைத்துச் சென்றுள்ளனர்.

இதன் பின்னர் ஏற்பட்ட ஒரு மோதல் சம்பவம் காரணமாக அவர் காயமடைந்து வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு நிலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்த சந்தேக நபர் மீது மூன்று வழக்குகள் மேல் நீதிமன்றில் விசாரிக்கப்பட்டு வருகின்றன.

இதற்கிடையில், இந்த சம்பவத்தில் காயமடைந்த ஒரு பொலிஸ் கான்ஸ்டபிள் கம்பஹா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

## 24 மணி நேரத்தில் 39 பேர் கைதாகினர்

முகக் கவசம் அணியத் தவறியமை மற்றும் சுகாதார அமைச்சால் வெளியிடப்பட்டுள்ள கொவிட் – 19 ஆலோசனைகளை பின்பற்றத் தவறிய குற்றச்சாட்டுக்காக கடந்த 24 மணிநேரப் பகுதியில் 39 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

ஒக்ரோபர் 30 ஆம் திகதி முதல் இந்தக் குற்றச்சாட்டுடன் தொடர்புடைய 1,899 பேர் மொத்தமாக கைதுசெய்யப்பட்டுள்ளனர் எனப் பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

## பிரபல சிங்கள பாடகர் மரணம்



இலங்கையின் பிரபல சிங்கள பாடகர் ஷெல்டன் முத்துநாமகே தனது 73 ஆவது வயதில் காலமானார்.

பாடகர் முத்துநாமகே உடல் நலக்குறைவு காரணமாக நீர்கொழும்பு வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு, சிகிச்சை பெற்று வந்த நிலையிலேயே உயிரிழந்துள்ளார் என அவரது குடும்ப உறுப்பின் ஒருவர் உறுதிப் படுத்தியுள்ளார்.

# வட்டவளை ஆடைத்தொழிற்சாலையில் மேலும் 16 ஊழியருக்குக் கொரோனா!

நுவரெலியா – வட்டவளை ஆடைத் தொழிற்சாலையில் பணிபுரிந்த ஊழியர்களில் மேலும் 16 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

வட்டவளை ஆடைத்தொழிற்சாலை ஊழியர் ஒருவருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதியானதையடுத்து, அங்கு தொழில் புரிந்தவர்களிடம் பி.சி.ஆர். மற்றும் என்டிஜன்ட் பரிசோதனைகள் நடத்தப்பட்டன.

இந்நிலையில் கடந்த 23 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனை முடிவுகள் நேற்று (ஞாயிற்றுக்கிழமை) வெளியாகின. இதில் மேலும் 16 ஊழியர்களுக்கு வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இதன்படி வட்டவளை ஆடைத்தொழிற்சாலையில் இதுவரை 55 தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

அம்பகமுவ, கினிகத்தேனை, பலன்தொட, வட்டவளை, டெம்பல்ஸ்டோ ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்களே இவ்வாறு கொரோனா வைரஸ் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இவர்களுடன் தொடர்பில் இருந்தவர்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர் என சுகாதார அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

# கொரோனா மரணம் தொடர்பில் பொய்ப் பிரசாரம் வேண்டாம்!

கொழும்பு, நவ.28

கொரோனா மரணங்கள் தொடர்பில் சமூக வலைத்தளங்களில் பொய்ப் பிரசாரங்கள் மேற்கொள்வதைத் தவிர்க்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பாக அறிக்கையொன்றை வெளியிட்டுள்ள சுகாதார அமைச்சு இந்த கோரிக்கையை முன்வைத்துள்ளது.

கொரோனா தொற்றால் உயிரிழப்போரின் இறுதிக் கிரியைகள் மேற்கொள்ளப்படும் விதம் தொடர்பாக அரசியல்வாதிகள் மற்றும் சில இணையத்தளங்கள் போலி பிரசாரங்களை மேற்கொள்கின்றன என அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சுகாதார அமைச்சுக்கு கிடைத்துள்ள அறிக்கைகளின் பிரகாரம், கொரோனா தொற்றால் உயிரிழக்கும் அனைவரின் சடலங்களும் தகனம் செய்யப்படுகின்றன என அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதனால் அரசியல் இலாபத்துக்காக சுகாதார அமைச்சின் கொள்கைகளைத் திரிபுபடுத்தி போலி செய்திகளை சமூக வலைத்தளங்களில் பகிர்வதை தவிர்க்குமாறு சுகாதார அமைச்சு கோரிக்கை விடுத்துள்ளது.

# கொரோனா வைரஸால் இறந்தவர்களை அடக்கம் செய்ய அனுமதிக்க வேண்டாம்!



## கொழும்பில் பௌத்த தேரர்கள் போர்க்கொடி; ஜனாதிபதி செயலகத்துக்கு முன்னால் பதற்றம்

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றால் உயிரிழக்கும் முஸ்லிம்களின் சடலங்களை அடக்கம் செய்வதற்கு அனுமதி வழங்கக் கூடாது என்று கோரி, பௌத்த அமைப்புகள் கொழும்பில் நேற்று ஆர்ப்பாட்டம் நடத்தின.

தேசிய அமைப்புகளின் ஒன்றியம், புதிய சிங்கள ராவய, சிங்கலே அமைப்பு உட்பட பௌத்த அமைப்புகளின் தேரர்கள் ஒன்றிணைந்து, கொழும்பு காலி முகத் திடல் மற்றும் ஜனாதிபதி செயலகத்துக்கு முன்னால் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

பௌத்த தேரர்கள் பொலிஸ் தடுப்புகளை மீறி ஜனாதிபதி செயலகத்தினுள் நுழைய முயற்சித்தபோது, அங்கு பதற்ற நிலையும் ஏற்பட்டது.

ஜனாதிபதியிடம் செய்தி மடலொன்றைக் கையளிக்கவே தாம் ஜனாதிபதி செயலகத்துக்குச் செல்ல முற்பட்டதாக ஆர்ப்பாட்டக்காரர்கள் தெரிவித்தனர்.

ஆர்ப்பாட்டத்தின்போது, சுகாதார அமைச்சர் அங்கு வந்தார். அவரிடம் மக்களைத் தெளிவூட்டுவதற்கான செய்தி மடல் கையளிக்கப்பட்டது.

நாட்டில் அனைவருக்கும் ஒரு சட்டமே இருக்க வேண்டும் என்றும், கொரோனாத் தொற்றால் மரணிக்கும் முஸ்லிம்களின் சடலங்களை அடக்கம் செய்ய அனுமதிக்கக் கூடாது என்றும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் வேண்டுகோள் விடுத்தனர்.

### முஸ்லிம் ஜனாஸா எரிப்பு:

# சிறுவனின் நடைபவனியை இடைநிறுத்தியது நீதிமன்று!

கொழும்பு, நவ.29

ஜனாஸா எரிப்புக்கு எதிராக கல்முனையைச் சேர்ந்த எட்டு வயது சிறுவனும் அவரது தந்தையும் மேற்கொண்ட வெண் துணி கவனவீர்ப்பு நடைபவனி நீதிமன்ற கட்டளையால் இடைநிறுத்தப்பட்டுள்ளது.

நேற்று (திங்கட்கிழமை) காலை 9.30 மணிக்கு கல்முனையில் ஆரம்பமான இந்த நடைபவனி, கல்முனை பிரதேச செயலக வளாகத்தில் எரிக்கப்பட்ட ஜனாஸாக்களுக்கு ஜனாஸா தொழுகை நடத்தப்பட்டு துஆப் பிரார்த்தனைகள் செய்த பின்னர், கல்முனை பிரதேச செயலாளர் எம்.எம். நஸீரிடம் மகஜர் ஒன்றை தந்தை மற்றும் மகனால் கையளிக்கப்பட்டு ஆரம்பமானது.

இவ்வாறு கல்முனை பகுதியில் இருந்து அக்கரைப்பற்றை நோக்கிச் சென்று கொண்டிருக்கும் வேளை, கல்முனை நீதிமன்ற நீதிவானின் உத்தரவிற்கமைய நடைபவனி நிறுத்தப்பட்டுள்ளது.

அதாவது கல்முனை, சாய்ந்தமருது, நிந்தவூர், அட்டளைசேனை, அக்கரைப்பற்று பிரதேச செயலாளர்களிடம் மகஜர்கள் கையளிக்க ஆயத்தங்கள் இருந்தும் கல்முனை நகர மண்டபத்துடன் இந்த நடை பவனி நீதிமன்ற உத்தரவின் பேரில் கல்முனை பொலிஸாரால் நிறுத்தப்பட்டது.

மேற்படி இடத்துக்கு வருகை தந்த சட்டத்தரணி ஆரிப் சம்சுதீன், பொலிஸாருடன் கலந்துரையாடி சட்டத்தரணியின் வாகனத்தில் சாய்ந்தமருது பிரதேச செயலகத்துக்கு அவர்களை அழைத்து வந்தார்.

ஜனாதிபதிக்கு அனுப்ப வேண்டிய மகஜரை சாய்ந்தமருது பிரதேச செயலாளர் ஐ.எல்.எம். றிக்காசிடம் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் கையளித்தனர்.

# வீடுகளை உடைத்துத் திருட்டு ஈடுபட்ட இருவருக்கு மறியல்!

திருக்கோவில் பிரதேசத்தில் நீண்ட காலமாக வீடுகளை உடைத்து பல திருட்டுச் சம்பவங்களில் ஈடுபட்டு வந்த 18 , 19 வயதுடைய இளைஞர்கள் இருவரை எதிர்வரும் 7 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு அக்கரைப்பற்று நீதிமன்ற நீதிவான் கடந்த ஞாயிற்றுக்கிழமை உத்தரவிட்டார்.

கடந்த மாதங்களில் திருக்கோவில் பிரதேசத்தில் இரு வீடுகள் உடைக்கப்பட்டு திருடப்பட்டன. இதில் ஒருவீட்டில் இருந்து, 60 ஆயிரம் ரூபா பெறுமதியான தங்க நகையும், 27 ஆயிரம் ரூபா பணமும், மற்றுமொரு வீட்டில் 40 ஆயிரம் ரூபா பெறுமதியான தங்க நகையும் திருடப்பட்டுள்ளன.

இந்தத் திருட்டு தொடர்பாக பொலிஸார் மேற்கொண்டு வந்த விசாரணையில், சின்னத் தோட்டத்தைச் சேர்ந்த 18, 19 வயது இளைஞர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். இதில் திருடப்பட்ட 60 ஆயிரம் ரூபா பெறுமதியான தங்க நகையும், பணமும் மீட்கப்பட்டமையுடன், கைது செய்யப்பட்ட இருவரையும் அக்கரைப்பற்று நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தியபோது அவர்களை எதிர்வரும் 7 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

இதேவேளை, கைது செய்யப்பட்ட ஒருவர் ஏற்கனவே திருட்டு தொடர்பாக கைது செய்யப்பட்டு, 5 வருடம் ஒத்திவைக்கப்பட்ட சிறைத்தண்டனை அனுபவித்து வரைன்பதுவும் குறிப்பிடத்தக்கது.

# கொரோனா மரணம்: அறிக்கை விரைவில்!

### வைத்தியர் சுதத் சமரவீர தெரிவிப்பு

கொரோனாவால் உயிரிழந்தவர்களின் இறுதிச் சடங்குகள் தொடர்பாக ஆராய நியமிக்கப்பட்ட நிபுணர்களின் குழுவின் அறிக்கை விரைவில் சுகாதார அமைச்சின் செயலாளரிடம் ஒப்படைக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி நிபுணர் குழு உயிரிழந்தவர்களை அடக்கம் செய்வதற்கான சாத்தியக் கூறுகள் தொடர்பான விஞ்ஞான ரீதியிலான காரணங்களை பரிசீலித்து வருவதாக சுகாதார அமைச்சின் தொற்று நோய் பிரிவின் விசேட வைத்திய நிபுணர் சுதத் சமரவீர தெரிவித்துள்ளார்.

இலங்கையில் வர்த்தமானி செய்யப்பட்ட சுகாதார வழிகாட்டுதல்களின்படி, கொரோனா தொற்றால் இறப்பவர்களின் உடல்கள் இறந்த 24 மணி நேரத்திற்குள் தகனம் செய்யப்படுகின்றன.



இந்நிலையில் கடந்த மாதம் இடம்பெற்ற நாடாளுமன்ற அமர்வில் பேசிய சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியராச்சி, கொரோனா தொற்றால் உயிரிழந்த அனைவரையும் தகனம் செய்வதற்கான முடிவை நிபுணர்கள் குழு மதிப்பாய்வு செய்யும் எனக் கூறினார்.

மேலும் தகனம் செய்வதற்கு அனுமதிக்கும் முடிவு மருத்துவ நிபுணர்களின் ஆலோசனையின் அடிப்படையில் எடுக்கப்பட்டதாகவும் அமைச்சர் பவித்ரா வன்னியராச்சி குறிப்பிட்டிருந்தார்.

# இந்தியாவிலிருந்து மன்னாருக்குக் கடத்தப்பட்ட 532 கிலோ மஞ்சள் கட்டிகள் தீயிட்டு அழிப்பு!

இந்தியாவில் இருந்து மன்னார் பகுதிக்கு சட்டவிரோதமாக கடத்தி வரப்பட்டு, மன்னார் பொலிஸாரால் கைப்பற்றப்பட்ட சுமார் 532 கிலோ மஞ்சள் கட்டிகள் நேற்று (திங்கட்கிழமை) தீயிட்டு அழிக்கப்பட்டுள்ளன.

மன்னார் உதவி பொலிஸ் அத்தியட்சகர் கஸ்தூரி ஆராய்ச்சி முன்னிலையில், மன்னார் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி சி.பி.ஜெயதிலக தலைமையில், பொலிஸ் தடயவியல் நிபுணத்துவ பொலிஸார் இணைந்து மன்னார் நகர சபைக்குச் சொந்தமான மலக்கழிவகற்றல் நிலையத்தில் வைத்து தீயிட்டு அழிக்கப்பட்டுள்ளன.

சுகாதார சேவைகள் அமைச்சின் செயலாளரால் அனுப்பி வைக்கப்பட சுற்று நிருபத்தின் அடிப்படையில் கொரோனா தொற்று அபாயம் உடைய கடத்தல் பொருள்களை உடனடியாக தீக்கிரையாக்கும் படியான அறிவுறுத்தலின் அடிப்படையில் மேற்படி மஞ்சள் கட்டிகள் முதற்கட்டமாக தீக்கிரையாக்கப்பட்டுள்ளன.



மன்னார், பேசாலை, தாழ்வுபாடு, தலைமன்னார் கடல் பகுதிகள் ஊடாக இந்தியாவில் இருந்து கடத்தி வரப்பட்ட மஞ்சள் கட்டிகளே மேற்படி அழிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# வட்டவளை, மவுன்ஜின் தோட்டம் தனிமைப்படுத்தலுக்கு உட்பட்டது!



அம்பகமுவ சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்கு உட்பட்ட வட்டவளை – மவுன்ஜின் தோட்டம் நேற்று (திங்கட்கிழமை) முதல் தனிமைப்படுத்தப்பட்டுள்ளதாக அம்பகமுவ சுகாதார வைத்திய அதிகாரி தெரிவித்தார்.

வட்டவளை ஆடைத்தொழிற்சாலையில் பணிபுரிந்த மவுன்ஜின் தோட்டத்தில் பலருக்கு கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

அவர்களுடன் தொடர்பில் இருந்தவர்களுக்கும் வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இந்த நிலையிலேயே வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்தும் நோக்கில் மவுன்ஜின் தோட்டம் முடக்கப்பட்டுள்ளது. இதனையடுத்து, இப் பகுதியில் இருந்து வெளியேறுவதற்கும் உள்ளேவருவதற்கும் தடைவிதிக்கப்பட்டுள்ளது.

மேலும் இந்தத் தோட்டத்தில் உள்ளவர்களிடம் பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளப்படவுள்ளது.

இதேநேரம், வட்டவளை ஆடைத் தொழிற்சாலை ஊழியர்கள் மற்றும் அவர்களுடன் தொடர்பில் இருந்த 59 பேருக்கு இதுவரை வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.


## மஞ்சள் கன்றுகள் விற்பனைக்கு!

நல்ல தரமான இரண்டு அடி வரை வளர்ந்த ஒன்றரை மாத மஞ்சள் கன்றுகள் யாழ்ப்பாணத்தில் விற்பனைக்கு உண்டு.

விலை - 150/=





கற்பகவனம் விற்பனை நிலையம்.
461, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
(யாழ் முற்றம் - Yarl Muttam)
021 492 7778

காலைக்கதிர் Kalaikkathir

# கொரோனாவிலிருந்து 520 பேர் குணமடைவு!

இலங்கையில் கொரோனா தொற்றில் இருந்து குணமடைந்தோரின் மொத்த எண்ணிக்கை 33 ஆயிரத்து 221 ஆக உயர்ந்துள்ளது.

கடந்த 24 மணிநேரத்தில் மட்டும் மேலும் 520 பேர் குணமடைந்துள்ளனர் என சுகாதார அமைச்சின் தொற்றுநோயியல் பிரிவு அறிவித்துள்ளது.

நாட்டில் இதுவரை கொரோனா தொற்று உறுதியானோரின் மொத்த எண்ணிக்கை 41 ஆயிரத்து 54 ஆக உயர்ந்துள்ளது.

இதில் 7 ஆயிரத்து 642 பேர் தொடர்ந்தும் சிகிச்சை பெற்றுவரும் அதேவேளை 497 பேர் கொரோனா தொற்று சந்தேகத்தில் மருத்துவக் கண்காணிப்பில் உள்ளனர்.

மேலும் இலங்கையில் கொரோனா தொற்றால் இதுவரை 191 பேர் உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# பேருவளை பொலிஸ் நிலையத்தின் பொறுப்பதிகாரிக்குக் கொரோனா!

பேருவளை பொலிஸ் பொறுப்பதிகாரிக்குக் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக பேருவளை சுகாதாரப் பரிசோதகர் தெரிவித்தார்.

பென்தோட்ட பாலத்துக்கருகில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடத்தப்பட்ட அன்டிஜன் பரிசோதனையின் போதே இவருக்கு தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

அதன்படி, அவர் சிகிச்சைக்காக கொழும்பில் உள்ள தொற்று நோய்கள் மையத்திற்கு அனுப்பப்பட உள்ளார், மேலும் அவருடன் தொடர்புகளைப் பேணியவர்களைக் கண்டுபிடிக்க உடனடி அன்டிஜன் சோதனைகள் மேற்கொள்ளப்படுகின்றன என அவர் மேலும் தெரிவித்தார்.

# மாகாணசபை தேர்தல் நடத்துவதை ஆதரித்தால் பெரமுன தன் கழுத்தை தானே அறுப்பதாகும்!

## மெதகொட அபயதிஸ்ஸ தேரர் அரசுக்கு எச்சரிக்கை



மாகாண சபைத் தேர்தலை நடத்துவது என கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் தீர்மானித்தால், அது ஶ்ரீலங்கா பொதுஜன பெரமுன அரசாங்கம் தனது கைகளால் கழுத்தை அறுத்து கொண்டமை போல் ஆகிவிடும் என அரசாங்கத்துக்கு ஆதரவான பௌத்த பிக்கு மெதகொட அபயதிஸ்ஸ தேரர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

கொழும்பில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இதனைக் கூறியுள்ளார்.

ஒற்றையாட்சி நாடு என்ற வார்த்தையை மட்டும் மீதம் வைத்து விட்டு நாட்டை பிரிவினைவாதத்துக்குள் கொண்டு சென்ற வேலைத்திட்டமே மாகாண சபை என்ற வேலைத்திட்டம். மாகாண சபைகள் ஒரு புறம் நாட்டை பிரிவினையை நோக்கி இட்டுச் செல்லும். மறுபுறம் பணம் வீண் விரயமாகும்.

மாகாண சபை முறைமை இந்த நாட்டுக்கு அவசியமில்லை என்பது கடந்த சில ஆண்டுகளாக ஒப்புவிக்கப்பட்டுள்ளது. புதிய அரசமைப்புச் சட்டம் உருவாக்கப்படும் போது இயற்கையாக மரணமடையும் மாகாண சபைகளே இருக்கின்றன. இதனால், இயற்கையாக மரணித்துள்ள மாகாண சபைகளுக்கு உயிரூட்டி, மீண்டும் நடைமுறைப்படுத்தி, அரசமைப்புச் சட்டம் உருவாக்கப்படுமாயின் அது 69 லட்சம் மக்களின் எதிர்பார்ப்பை நிறைவேற்றுவதாக இருக்காது.

மாகாண சபைகளை ஸ்தாபித்து சிலரது தம்பிமார், சிலரது கணவன்மார், சிலரது உறவினர்கள், பிள்ளைகளுக்கு முதலமைச்சர் பதவிகளை வழங்கி பொதுமக்களின் அபிலாஷைகளை பலி கொடுக்க வேண்டாம் என்பதை நாங்கள் விசேடமாக நினைவூட்டுகிறோம்.

மாகாண சபைத் தேர்தலை நடத்தி, மாகாண சபைகள் தொடர்பாக இருக்கும் எதிர்ப்பை அரசாங்கத்துக்கு எதிரான எதிர்ப்பாக மாற்றிக்கொள்ள வேண்டாம். 28 ஆம் திகதி (நேற்று) அரசாங்கம் கட்சித் தலைவர்களின் கூட்டத்தை நடத்தவுள்ளது. கூட்டத்தில் மாகாண சபைத் தேர்தலை நடத்துவது என தீர்மானித்தால் அரசாங்கம் தனது கைகளால் கழுத்தை அறுத்துக்கொண்டமை போல் ஆகிவிடும் எனவும் மெதகொட அபயதிஸ்ஸ தேரர் குறிப்பிட்டுள்ளார்.

எது,எப்படி இருந்த போதிலும் மாகாண சபைத் தேர்தலை நடத்த வேண்டும் என்பது அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் அரசியல் பிரதிநிதிகள் பலரது நிலைப்பாடாக இருந்து வருகிறது. ஶ்ரீலங்கா பொதுஜன பெரமுன எதிர்க்கட்சியாக இருந்த போது மாகாண சபைத் தேர்தலை நடத்துமாறு கோரி பாரிய போராட்டங்களை நடத்தியமை குறிப்பிடத்தக்கது.

# திருமலை வெள்ளத்தால் 6,600 பேருக்குப் பாதிப்பு



(ஹஸ்பர் ஏ ஹலீம்)

*திருகோணமலை மாவட்டத்தில் பெய்த கனமழை காரணமாக 1,911 குடும்பங்களைச்சார்ந்த 6,617 அங்கத்தவர்கள் பாதிக்கப்பட்டனர் என திருகோணமலை மாவட்ட அரசாங்க அதிபர் சமன் தர்சன பாண்டிகோராள தெரிவித்தார்.*

*இவர்களுள் அதிகபட்சமாக பட்டினமும் சூழலும் பிரதேச செயலகப்பிரிவில் 1,104 குடும்பங்களின் 3,849 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். 1,380 குடும்பங்களைச் சேர்ந்த 4,829 பேர் உறவினர் வீடுகளில் தங்கியிருக்கின்றமையுடன் மொத்தமாக 4 வீடுகள் முழுமையாகவும் 43 வீடுகள் பகுதியளவிலும் பாதிக்கப்பட்டுள்ளன எனவும் அரசாங்க அதிபர் மேலும் தெரிவித்தார்.*

*பாதிக்கப்பட்ட வீடுகளது இழப்புக்கள் பிரதேச செயலகம் மூலம் மதிப்பீடு செய்யப்பட்டு உரிய அமைச்சின் கவனத்திற்கு கொண்டுவரப்படவுள்ளதாகவும் முதல் கட்டமாக பாதிக்கப்பட்ட வீட்டுடமையாளர்களுக்கு பத்தாயிரம் ரூபா முற்பணம் வழங்கப்படவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.*

*அரசாங்க அதிபருடன் அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தின் மாவட்ட செயலகப்பிரிவின் உதவிப்பணிப்பாளர் கே.சுகுணதாஸ் உட்பட் அதிகாரிகள் பலர் வெள்ளநீர் தேங்கிய குடிமனை சார் பிரதேசங்களில் நீரை வெளியேற்ற கடும்பிரயத்தனத்தை மேற்கொண்டமை குறிப்பிடத்தக்கது.*

# சீனாவைக் கடாசி வீசினால் நிதியுதவி; இலங்கைக்கு அமெரிக்கா நிபந்தனை?

கொழும்பு, நவ.29

இலங்கைக்கு தொடந்தும் நிதியுதவியை வழங்குவதற்கு அமெரிக்கா கடுமையான நிபந்தனையை விதித்துள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதன்படி சீனாவின் செல்வாக்குக்கு எதிராக இலங்கை தனது இறைமையை உறுதிப்படுத்தும் நடவடிக்கைகளில் ஈடுபட்டாலே நிதியுதவி கிடைக்கும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கைக்கு நிதி உதவி வழங்குவது தொடர்பாக அமெரிக்க காங்கிரஸில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள யோசனைத் திட்டத்திலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

சீனாவின் செல்வாக்கிற்கு எதிராக தனது இறைமையை வலியுறுத்தும் நடவடிக்கைகளை இலங்கை எடுத்துள்ளது என அமெரிக்க இராஜாங்கச் செயலாளர் உறுதி செய்தால் மாத்திரமே இலங்கைக்கு எதிர்காலத்தில் நிதியுதவி வழங்கப்படும் என அந்த சட்டமூலத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இலங்கை இன மற்றும் மதக்குழுக்களுக்கு இடையில் நல்லிணக்கத்தை ஊக்குவிக்க வேண்டும், ஆட்சி முறையில் வெளிப்படைத் தன்மை மற்றும் பொறுப்புக்கூறலை அதிகரிக்க வேண்டும், இலங்கை மக்களின் உரிமைகள் மற்றும் சுதந்திரத்தை அவர்களின் மத மற்றும் இன நம்பிக்கைகளை எதுவாகவிருந்தாலும் மதிக்க வேண்டும், உறுதி செய்ய வேண்டும் குற்றங்களில் ஈடுபட்டவர்களை நீதியின் முன்நிறுத்த வேண்டும் என அந்தச் சட்டமூலம் தெரிவித்துள்ளது.

# மட்டக்களப்பில் பெண்ணொருவருக்கு கொரோனா: 35 பேர் தனிமைப்படுத்தல்; பலசரக்குக்கடை பூட்டு!

மட்டக்களப்பு நகரிலுள்ள பலசரக்குக் கடையில் கடமையாற்றும் ஆரையம்பதியைச் சேர்ந்த பெண் ஒருவருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

அதனைத் தொடர்ந்து நேற்று (திங்கட்கிழமை), மேற்படி பலசரக்குக்கடை பூட்டப்பட்டதுடன் அதில் கடமையாற்றிய 35 பேர் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர் என மட்டக்களப்பு பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர் மயூரன் தெரிவித்துள்ளார்.

மேலும் இந்தப் பல்பொருள் அங்காடிக்கு வருகை தந்தவர்களையும் தனிமைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் சுட்டிக்காட்டினார்.

ஆரையம்பதியில் கடந்த சனிக்கிழமை எழுமாறாக செய்யப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில் இந்தப் பல்பொருள் அங்காடியில் கடமையாற்றும் பெண் ஒருவருக்குக் கொரோனாத் தொற்று கடந்த ஞாயிற்றுக்கிழமை கண்டறியப்பட்டமையையடுத்தே இத்தகைய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என சுகாதார பணிப்பாளர் மயூரன் குறிப்பிட்டுள்ளார்.

# வாகன விபத்து இருவர் காயம்!



வலப்பனை பகுதியிலிருந்து கொழும்பு பகுதிக்கு சென்ற கனரக லொறி ஒன்று விபத்துக்குள்ளாகியுள்ளது.

ஹற்றன் – கொழும்பு பிரதான வீதியில் கினிகத்தேனை பிட்டவல பகுதியில் வைத்து, இந்த லொறி வீதியை விட்டு விலகி சுமார் 100 அடி பள்ளத்தில் பாய்ந்து ரம்புக்பத்ஓயாவில் விழுந்து விபத்துக்குள்ளாகியுள்ளது.

நேற்று திங்கட்கிழமை காலை இந்த விபத்து நேர்ந்துள்ளதாக கினிகத்தேனை போக்குவரத்துப் பொலிஸார் தெரிவித்தனர்.

எதிரே வந்த வாகனம் ஒன்றுக்கு இடமளிக்கும் போதே வாகனத்தை கட்டுப்படுத்த முடியாதமையால் இந்த விபத்து ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

லொறியில் சாரதியும், உதவியாளரும் பயணித்துள்ளனர் எனவும், இருவரும் பலத்த காயங்களுக்குள்ளாகி கினிகத்தேனை வைத்தியசாலையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்ட பின்னர் மேலதிக சிகிச்சைக்காக நாவலப்பிட்டி பிரதேச வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

இந்த விபத்து தொடர்பாக மேலதிக விசாரணைகளை கினிகத்தேனை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# சமஷ்டி தீர்வு என்று கூறி மீண்டும் தமிழ் மக்களை ஏமாற்ற முயற்சி!

## கூட்டமைப்பு மீது ஆனந்த சங்கரி காட்டம்

மாகாண சபைக்கான தேர்தலில் தமிழ் மக்களின் வாக்குகளைப் பெறுவதற்காக சமஷ்டிதான் தீர்வென கூறி மீண்டும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு ஏமாற்ற முயற்சிக்கின்றதென தமிழர் விடுதலைக் கூட்டணி செயலாளர் நாயகம் வீ. ஆனந்த சங்கரி தெரிவித்துள்ளார்.

தமிழர் விடுதலைக் கூட்டணி கட்சி செயலாளர் நாயகம் வீ.ஆனந்தசங்கரி நேற்று (திங்கட்கிழமை) வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அந்த ஊடக அறிக்கையில் அவர் மேலும் கூறியுள்ளவை வருமாறு:-

தற்போது சமஷ்டி என்ற பதம் சிங்களத் தலைமைகளுக்கும் சிங்கள மக்களுக்கும் பிடிக்காத ஒரு சொல்லாகிவிட்டது.

ஆரம்பத்தில் சமஷ்டி என்ற வார்த்தையை சிங்களத் தலைமைகள்தான் பேச ஆரம்பித்தன. அது ஒரு காலம். பின் அவர்களே தனிச்சிங்கள சட்டம் கொண்டு வந்தார்கள். முள்ளிவாய்க்காலில் யுத்தம் முடிவுக்கு வரும் வரை சமஷ்டி நோக்கித்தான் அனைவரும் செயற்பட்டோம். அதன் பின்னர் இன்று வரை நடக்கும் சம்பவங்களை சம்பந்தன் மறந்துவிட்டாரா?

கடந்த 2015 ஆம் ஆண்டு நடந்த நாடாளுமன்றத் தேர்தல் மூலம் நல்லிணக்கத்துக்கான ஒரு நல்லாட்சியை மக்கள் உருவாக்கி, ஒரு தேசிய அரசாங்கம் அமைக்கப்பட்டது. இதற்கும் தாங்கள்தான் காரணம் என சம்பந்தன் கூறி இருந்தார்.

அந்த நல்லாட்சி முழுவதும் இரா.சம்பந்தன் எதிர்க்கட்சித் தலைவராக நியமனம் செய்யப்பட்டார். ஒரு நாட்டை ஆளும் அரசு வருடா வருடம் சமர்ப்பிக்கப்படும் வரவு - செலவுத் திட்டத்துக்கு ஆதரவு தெரிவித்த உலகின் ஒரேயொரு எதிர்க்கட்சித் தலைவர் என்ற பெருமையையும் பெற்றுக் கொடுத்தவர்.

அன்றைய அரசின் ஜனாதிபதியாக இருந்த மைத்திரிபால சிறிசேன, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோருக்கு மிகவும் நெருக்கமான சகாவாக இருந்து எதிர்க்கட்சித் தலைவர் என்ற கதிரையை அலங்கரித்தவர். அப்போது இந்த சமஷ்டியைப்பற்றி பேசாது அந்தத் தீர்வைப் பெற்றுத்தர எந்த முயற்சியும் எடுக்காமல் தனது எதிர்க்கட்சித் தலைவர் என்ற பதவி பறிபோய்விடும் என்ற பயத்தில் வாய்மூடி



மௌனமாக இருந்துவிட்டு, இன்று சமஷ்டி பற்றிப் பேசுகின்றார்.

தமிழ் மக்களுக்கு சம்பந்தனின் கபட நாடகம் எப்போதும் புரிவதில்லை. அதனால்தான் அவரும் அதனை சாதகமாகப் பயன்படுத்திக் கொள்கின்றார்.

தமிழ் மக்களுக்கு அவர் ஏதாவது நன்மை செய்ய விரும்பினால், நல்லெண்ணத்துடன் தமிழ் மக்கள் அனைவரையும் ஒன்றுதிரட்டி உருவாக்கும் அணியினருக்கு ஆதரவு தெரிவித்து, இந்திய முறையிலான ஓர் அரசியல் தீர்வை பெற்றுத்தர முயற்சிகளை மேற்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றேன். -என அவர் குறிப்பிட்டுள்ளார்.

## கொரோனா நோயாளி ஓட்டம் பலர் தனிமைப்படுத்தலில்!

சபுகஸ்கந்த பகுதியில் கொரோனா தொற்றாளர் ஒருவர் தப்பிச்சென்றமையையடுத்து அந்தப் பகுதியில் வசிக்கும் 22 பேர் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர் என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் றோஹண தெரிவித்துள்ளார்.

தப்பிச்சென்ற நபர் சப்புஸ்கந்தையின் மாகொல வடக்கில் அவரது காதலி வீட்டில் கண்டுபிடிக்கப்பட்டுள்ள நிலையில், அவருடன் நெருங்கிய தொடர்பிலிருந்த ஆறு வீடுகளைச் சேர்ந்த 22 பேரே இவ்வாறு தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

இந்த நிலையில், கொரோனா தொற்றாளர்கள் என அடையாளம் காணப்பட்ட நிலையில் தனிமைப்படுத்தப்பட்ட போது அல்லது சிகிச்சையளிக்கப்படும்போது தப்பியோடியவர்களுக்கு ஆதரவு வழங்கும் அனைவருக்கும் எதிராகக் கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்

போதைப்பொருளுக்கு அடிமையான சப்புஸ்கந்தையைச் சேர்ந்த 22 வயதுடைய நிமேஸ் மதுசாங்க என்ற சந்தேக நபர், சமீபத்தில் மஹர சிறையிலிருந்து விடுதலையானவர் என பொலிஸ் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

அதன் பின்னர் அவருக்கு மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். சோதனை முடிவுகள் வெளியாகும் வரை வீட்டில் சுயதனிமைப்படுத்தலை முன்னெடுக்குமாறு அதிகாரிகள் உத்தரவிட்டிருந்தனர் என பொலிஸ் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

இதனையடுத்து, சோதனை முடிவுகளில் அவர் கொரோனாவால் பாதிக்கப்பட்டுள்ளமை உறுதி செய்யப்பட்ட நிலையில், அவர் காணாமல்போயிருந்தார் என பொலிஸ் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

இதையடுத்து பொதுச்சுகாதாரப் பரிசோதகர்கள் பொலிஸார் இணைந்து மேற்கொண்ட விசேட நடவடிக்கையில் சப்புஸ்கந்தையின் மாகொல வடக்கில் அவரது காதலி வீட்டில் வைத்து கடந்த ஞாயிற்றுக்கிழமை அவர் கைது செய்யப்பட்டார் என பொலிஸ் பேச்சாளர் மேலும் தெரிவித்துள்ளார்.

# கல்முனை மாநகரை முடக்கி மக்களைக் காப்பாற்றுங்கள்!

## பொது அமைப்புகள் மன்றாட்டம்



(வி.ரி.சகாதேவராஜா)

கல்முனையில் தினம் தினம் கொரோனாத்தொற்று அதிகரித்துவருகிறது. எனவே தொற்று கூடுதலாக இனங்காணப்பட்ட பகுதிகள் அடங்கலாக கல்முனை மாநகரை முடக்கி மக்களைக் காப்பாற்றுங்கள்.

- இவ்வாறான கோரிக்கையை கல்முனை விகாரையில் இடம்பெற்ற கூட்டத்தில் பொதுஅமைப்புகளின் பிரதிநிதிகள் கல்முனை மாநகரசபை உறுப்பினர்களிடம் விடுத்துள்ளனர்.

இந்தக் கூட்டம் நேற்று முன்தினம் மாலை தமிழ்தேசியக் கூட்டமைப்பின் கல்முனை மாநகரசபை உறுப்பினர் சந்திரசேகரம் ராஜனின் ஏற்பாட்டில் சுபத்ராராமய விகாராதிபதி வண.ரண்முத்துகல சங்கரத்ன தேரர் தலைமையில் நடைபெற்றது.

கல்முனை மாநகர எல்லைக்குள் நேற்று வரை கொரோனா எண்ணிக்கை 188 தொற்றுக்களாக அதிகரித்திருக்கிறது. கல்முனை தெற்கில் 144 பேரும், சாய்ந்தமருதில் 33 பேரும், கல்முனை வடக்கில் 11 பேரும் தொற்றுக்குள்ளாகியுள்ளனர். சாய்ந்த மருதில் ஒரு மரணம் சம்பவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

கல்முனை மாநகரசபை உறுப்பினர்களான சந்திரசேகரம் ராஜன் வி.சிவலிங்கம் கே.செல்வராசா எஸ்.சந்திரன் ஆகியோரும் பொலிஸ் நிலையப் பிரதிநிதியும் கலந்து கொண்டு கருத்துரைத்தனர்.

கல்முனையின் பல பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் பலர் சுகாதார நெறிப்படி கலந்துகொண்டு கருத்துரைக்கையில் மேற்கண்டவாறு தெரிவித்தனர்.

மேலும் பொதுஅமைப்புகளின் இக்கோரிக்கையை எழுத்துமூலம் பெற்று கல்முனை மாநகரசபை மேயர் மற்றும் சுகாதாரசேவைப் பணிப்பாளரையும் சந்தித்து முடிவெடுப்பது என்று கூட்டமுடிவில் தீர்மானிக்கப்பட்டது.

# சிறைச்சாலை கொத்தணி 3,709 ஆக அதிகரித்தது!

சிறைச்சாலையில் நேற்று (ஞாயிற்றுக்கிழமை) மட்டும் மேலும் 54 பேருக்கு கொரோனா தொற்று உறுதியாகியுள்ளதாக சிறைச்சாலைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அதன்படி நாடு முழுவதும் உள்ள சிறைச்சாலைகளில் இதுவரை 3 ஆயிரத்து 709 பேருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு தொற்று உறுதியானவர்களில் 3 ஆயிரத்து 229 பேர் குணமடைந்துள்ளனர் எனவும் அவர்களில் 112 பேர் சிறைச்சாலை அதிகாரிகள் என்றும் சிறைச்சாலைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதுவரை வெலிக்கடை சிறைச்சாலையில் 832 பேருக்கும் மகசீன் சிறைச்சாலையில் 829 பேருக்கும், மஹர சிறையில் 785 பேருக்கும், கொழும்பு விளக்கமறியல் சிறையில் 410 பேருக்கும், நீர்கொழும்பு சிறையில் 271 பேருக்கும் கொரோனா தொற்று உறுதியாகியுள்ளது.

அத்தோடு சிறைச்சாலையில் இதுவரை கொரோனா தொற்று உறுதியாகிய 5 பேர் உயிரிழந்துள்ளனர் எனவும் சிறைச்சாலைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

# போதைப் பொருள் கடத்தலைத் தடுக்க சர்வதேச உளவுத் தகவல்களின் உதவி

இலங்கைக்குள் போதைப்பொருள் கடத்தி வரப்படுவதைத் தடுப்பதற்காக, ஐக்கிய நாடுகள் சபையின் போதைப் பொருள் மற்றும் குற்றவியல் அலுவலகத்துக்கு கிடைக்கும் இரகசிய தகவல்களைப் பயன்படுத்த இலங்கை நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளது.

பொலிஸ் போதைப் பொருள் தடுப்புப் பணியகம், இலங்கை கடற்படை மற்றும் அரச உளவுச் சேவை இணைந்து போதைப் பொருள் தடுப்பு நடவடிக்கைகளை முன்னெடுக்கவுள்ளன. அதன்படி, சர்வதேச போதைப் பொருள் கடத்தல் வலையமைப்பின் நடவடிக்கைகள், இலங்கைக்கு அவர்கள் போதைப் பொருள் கடத்தும் பாதைகள் உள்ளிட்டவை தொடர்பில் செய்மதித் தகவல்கள் மற்றும் ஏனைய உளவுச் சேவைகளின் தகவல்களை ஐக்கிய நாடுகளின் போதைப் பொருள் மற்றும் குற்றவியல் அலுவலகம் ஊடாக பகிர்ந்துகொள்வதற்கான ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இவ்வாறு தகவல் பரிமாற்றங்களை முன்னெடுத்து, இலங்கையில் போதைப் பொருள் சுற்றி வளைப்புக்கள் முன்னெடுக்கப்படவுள்ளமையுடன், இதற்கான பல சுற்று பேச்சுகள் அதிகாரிகளிடையே கடந்த வாரங்களில் இடம்பெற்றுள்ளன.

போதைப் பொருள் கடத்தல் மத்திய நிலையமாக இலங்கை அடையாளம் காணப்பட்டுள்ள நிலையிலேயே, இவ்வாறான நடவடிக்கைகள் தொடர்பில் பேச்சுக்கள் இடம்பெற்றுவருகின்றன.

இலங்கைக்கு கடல் மார்க்கமாக கடத்தப்படும் போதைப் பொருள்கள், அங்கிருந்து ஆஸ்திரேலியா, இந்தோனேஷியா போன்ற நாடுகளுக்கும் தென் ஆபிரிக்க நாடுகளுக்கும் கடத்தப்படுவதாக சர்வதேச தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்நிலையில் அடுத்த ஒரு வாரத்துக்குள், ஐக்கிய நாடுகள் சபையின் போதைப் பொருள் மற்றும் குற்றவியல் அலுவலகம் ஊடாக இரகசியத் தகவல்களைப் பெற்று முன்னெடுக்கவுள்ள நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படலாம் என அரசின் உயர் மட்ட தகவல்கள் தெரிவித்தன.

# கொழும்பில் 6 மாதங்களில் 78 தொற்றாளர் வீட்டில் சாவு!

கொழும்பு, டிசெ.29

கொவிட் - 19 வைரஸ் தொற்று காரணமாக, கடந்த 6 மாதங்களில் கொழும்பு மாநகர சபை எல்லைக்கு உட்பட்ட பகுதியில் மட்டும் 78 பேர் தமது வீடுகளிலேயே மரணித்துள்ளனர் என கொழும்பு பிரதான சட்ட வைத்திய அதிகாரி அஜித் தென்னகோன் தெரிவித்தார்.

இந்தக் காலப்பகுதியில் வீடுகளில் உயிரிழந்த 383 பேர் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட நிலையில், அவர்களுக்கு முன்னெடுக்கப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனைகளிலேயே 78 பேர் கொவிட் தொற்றால் உயிரிழந்தமை கண்டறியப்பட்டுள்ளது.

வீடுகளில் மரணிப்போருக்கும் பி.சி.ஆர். பரிசோதனைகளை முன்னெடுக்கும் நடை முறை கடந்த ஜூன் மாதம் ஆரம்பிக்கப்பட்ட போதும், வீட்டில் உயிரிழந்த முதல் கொவிட் தொற்றாளர் கடந்த ஒக்ரோபர் 26 ஆம் திகதியே அடையாளம் காணப்பட்டனர் எனவும், அது முதல் ஞாயிறு வரையிலான காலப்பகுதியில் இந்த வீடுகளில் நிகழ்ந்த 78 கொவிட் மரணங்களும் அடையாளம் காணப்பட்டுள்ளன எனவும் பிரதான சட்ட வைத்திய அதிகாரி, விஷேட வைத்திய நிபுணர் அஜித் தென்னகோன் கூறினார்.

கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு, கடந்த முதலாம் திகதி முதல் 25 ஆம் திகதிவரை வீடுகளில் நிகழ்ந்த 130 மரணங்கள் பதிவாகின எனவும் அதில் 37 மரணங்கள் கொவிட் 19 தொற்றால் நிகழ்ந்தவை என உறுதி செய்யப்பட்டுள்ளன எனவும் தேசிய வைத்தியசாலையின் தகவல்கள் தெரிவித்தன.

# தமிழ் தகவல் நடுவத்தின் ஏற்பாட்டில் சர்வதேச மனித உரிமைகள் தினம்

## எரிக் சொல்ஹெய்ம் பங்கேற்பு

லண்டன், டிசெ.29

சர்வதேச மனித உரிமைகள் தினத்தினை முன்னிட்டு தமிழ் தகவல் நடுவத்தின் உலக மனித உரிமைகள் தினம் லண்டனில் நடைபெற்றது.

சூம் தொழில்நுட்பம் மூலம் இடம்பெற்ற இந்த வருடத்துக்கான நிகழ்வில், நோர்வேயின் இராஜந்திரியும், முன்னாள் சமாதானத் தூதுவருமான எரிக்சொல்ஹெய்ம் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டார்.

சிறப்பு விருந்தினர்களாக இலங்கைத் தமிழர் மரபுரிமை பேரவையின் இணைத்தலைவரான அருட்தந்தை லியோ ஆம்ஸ்ரோங், ஐ.நாவின் முன்னாள் வதிவிடப் பிரதிநிதியும் சிரேஷ்ட அதிகாரியுமான டேவிட் வெயிலி, பிரான்ஸ் மனித உரிமைகளுக்கான தமிழர் மையத்தின் பணிப்பாளரும் ஆய்வாளருமான டெயிட்றி மக்கொனல், பிரித்தானிய நாடாளுமன்ற உறுப்பினரும், தமிழர்களுக்கான பிரித்தானியாவின் அனைத்துக் கட்சிப் நாடாளுமன்றக் குழுவின் தலைவருமான எலியட் கோல் பேர்ண் மற்றும் பிரித்தானிய நாடாளுமன்ற உறுப்பினர் எட்டேவி ஆகியோர் கலந்து கொண்டனர்.



இந்நிகழ்வின்போது, தமிழ் மக்களுக்காகப் போராடும் மனித உரிமைச் செயற்பாட்டாளர்கள் வருடாந்தம் கௌரவிப்பது வழமை.

அதன்படி நடப்பாண்டுக்கான மனித உரிமைகள் காவலர் விருது எம்.சி.எம். இக்பாலுக்கும், மறைந்த வரதகுமார் ஞாபகார்த்த விருது பிரபல புலனாய்வு ஊடகவியலாளர் பில் மில்லர் மற்றும் மனித உரிமைச் செயற்பாட்டாளர் கலாநிதி றேச்சல் சோய்ஜி ஆகியோருக்கும் வழங்கப்பட்டது.

இந்நிகழ்வை செயற்பாட்டாளர்களான சிதம்பரசுப்பிரமணியம் திருச்செந்தில்நாதன் மற்றும் விஜய் விஜயநாதன் ஆகியோர் சூம் தொழில்நுட்பம் ஊடாக ஒளிபரப்புச் செய்தனர்.



பிரதான ஒருங்கிணைப்பாளர்களான சசிகரன் செல்வசுந்தரம் மற்றும் நவரட்ணம் தினேஷ் தலைமையில், சதீஸ் குலசேகரம், கிறிஸ்ரி நிலானி காண்டீபன், ராஜேந்திரம் சுதன், நிரோஜன் பாலசிங்கம், வினோதன் கந்தலிங்கம், ரவிச்சந்திரன் நிஷாந், சஞ்ஜீவன் ஶ்ரீதரன், குகதாசன் சுலக்சன், சுபதர்ஷா வரதராசா, சுபமகிஷா வரதராசா, அரவிந்தராஜ் நல்லதம்பி, தர்மபாலன் விமலாகரன், விஜய் விவேகானந்தன், வாகீஸ்வரன் பிரசாந்த், சுஜிதா கனகசபாபதி, சாந்தலொஜித்தன் புகலவன் மற்றும் கமில்டன் ஜோர்ச் பிரவிந்தன் அடங்கிய அணியினர் இந்நிகழ்வை நடத்தினர்.

சமூக நல அறிவிப்பு

**பதற்றம் அடையாமல் அவசர தொடர்பிலக்கங்களுக்கு உடனே அழையுங்கள்**






**நீங்களோ, உங்களுக்குத் தெரிந்த எவரேனும் கொரோனா தொடர்பான பதற்ற நிலையிலோ அல்லது கவலைப்பட்டுக்கொண்டோ இருப்பின், 1999 என்ற இலக்கத்தையோ அல்லது 1919 என்ற இலக்கத்தையோ அழையுங்கள், அல்லது 021 222 3348 என்ற யாழ் போதனா வைத்தியசாலை இலக்கத்துக்கு அழையுங்கள்.**




**தனிமைப்பட்டுவிட்டோம் என்ற உணர்வு உங்களுக்கு இருந்தால், 1919 என்ற இலக்கத்தில் 'கொரோனா வைரஸ் அவசர உதவி இணைப்பினை' (Coronavirus Hotline) அழைத்து உள்ளூர் சேவைகளுடன் உங்களைத் தொடர்புபடுத்தக்கூடிய சுகாதார பரிசோதகர் ஒருவருடன் நீங்கள் தொடர்புகொண்டு உங்கள் அவசர அவசியங்களை உடன் நிவர்த்தி செய்யுங்கள் .**

**சமூக அக்கறையுடன் - கொரோனா தொடர்பான விழிப்புணர்வுத் தகவல்களை உங்களுக்கு வழங்க இன்று அனுசரணை வழங்குகின்றனர்:-**

**விக்கி லேணர்ஸ்**



அரச அங்கீகாரம் பெற்ற முதற்தர சாரதி பயிற்சி பாடசாலை

சுன்னாகம் 077 381 0444

268.கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம் 076 536 0444

புத்தூர் 077 167 8844

மானிப்பாய் 077 291 8444

பலாலிவீதி,
பரமேஸ்வரா சந்தி
யாழ்ப்பாணம்
(தலைமை காரியாலயம்)
076 776 8444

Hot Line 0778308360

# 6 ஆவது சமகால முகாமைத்துவ சர்வதேச ஆய்வு மாநாடு யாழில்!

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முகாமைத்துவக் கற்கைகள் மற்றும் வணிக பீடத்தின் 6 ஆவது சமகால முகாமைத்துவ சர்வதேச ஆய்வு மாநாடு எதிர்வரும் 2021 ஆம் ஆண்டு சித்திரை மாதம் 29 மற்றும் 30 ஆம் திகதிகளில் நடைபெற வுள்ளது.

இதனை முன்னிட்டு நிகழ்வை அறிமுகம் செய்யும் வகையிலான ஊடக சந்திப்பு நேற்று (திங்கட்கிழமை) நண்பகல், யாழ்.பல்கலைக்கழக சபா மண்டபத்தில், முகாமைத்துவ கற்கைகள் மற்றும் வணிக பீடத்தின் பீடாதிபதி பேராசிரியர் பா.நிமலதாசன் தலைமையில் இடம் பெற்றது. இந்த நிகழ்வில் பல்கலைக் கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா கலந்துகொண்டு சிறப்புரை ஆற்றினார்.



மேலும், பீடத்தின் 6 ஆவது சமகால முகாமைத்துவ சர்வதேச ஆய்வு மாநாட்டுக்கான இணையத் தளத்தைப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சி. சிறிசற்குணராஜா சம்பிரதாய பூர்வமாக இயக்கி ஆரம்பித்து வைத்தார்.

இந்தச் சந்திப்பின்போது, ஆய்வு மாநாடு தொடர்பாக வழங்கப்பட்ட விவரம் வருமாறு:-

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முகாமைத்துவக் கற்கைகள் மற்றும் வணிக பீடம் 6 ஆவது சமகால முகாமைத்துவ சர்வதேச ஆய்வு மாநாட்டினை 'நிலைபேறான அபிவிருத்திக்கான பிரச்சினைகள் மற்றும் சவால்கள், பொருளாதார மீண்மைக்கான தீர்வுகளுக்கு ஊக்கமளித்தல்' என்ற ஆய்வுக் கருப்பொருளில் 2021ஆம் ஆண்டு சித்திரை மாதம் 29 ஆம் மற்றும் 30 ஆம் திகதிகளில் நடத்த தீர்மானித்திருக்கின்றது.

எதிர்கால சந்ததியினருக்கான வளமான எதிர்காலத்தை உருவாக்குவதுடன் நெருக்கடிகளைத் தவிர்த்து வாய்ப்புக் களையும் அவர்களின் எதிர்பார்ப்புக் களையும் நிவர்த்தி செய்யக்கூடியவாறான நிலைபேறான அபிவிருத்தியை உருவாக்குவது தற்காலத்தில் மிக முக்கிய அம்சமாகக் கருதப்படுகின்றது.

நிலைபேறான அபிவிருத்தி பொருளாதார, சமூக மற்றும் சுற்றுச்சூழலை ஒன்றிணைப்பதாகக் காணப்படுகின்றது. நாம் எல்லோரும் பல்வேறுபட்ட எதிர்பாராத சவால்களும் இடர்களும் மிகுந்த சகாப்தத்தில் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம் என்பது மறுக்கப்பட முடியாத உண்மையாகும்.

குறிப்பாக கொவிட் - 19 பேரிடர் மக்களின் அன்றாட வாழ்வாதாரத்தில் பரந்த தாக்கத்தை ஏற்படுத்தி வருகின்றது. இது தொடர்பில் வளர்ந்த மற்றும் வளர்ந்துவரும் நாடுகளுக்கிடையில் வேறுபாடுகள் அரிது.

இந்த இடர் பல மில்லியன் வேலை வாய்ப்புகளை ஆபத்து நிறைந்ததாக மாற்றியுள்ளது. அத்துடன் நாடுகளின் பொருளாதர மந்தம், வறுமை மற்றும் நிறுவன அமைப்புக்களின் முடக்க நிலை போன்றவற்றைத் தோற்றுவித்துள்ளது. இவை நிச்சயமற்ற எதிர்காலத்துக்கு வித்திட்டு வருகின்றது.

இவ்வாறான ஆபத்தான சூழ்நிலையில் குறிப்பாக வளர்ந்துவரும் நாடுகள் பொருளாதார நலன் சார்ந்த மூலோபாய மாற்றத்தை ஏற்படுத்தக்கூடிய பொறிமுறைகளினூடாக பின்னடைவுகளிலிருந்து மீள்வதற்கான தீர்வுகளை பெற்றுக் கொடுப்பதோடு நிலைபேறான அபிவிருத்தியை நோக்கிய செயற்பாடுகளுக்கு வழியமைக்க வேண்டியது அவசியமாகின்றது.

பொருளாதாரத்தை மீள் கட்டியெழுப்பும் நடவடிக்கைகளை நடைமுறைப் படுத்தல், வேலை வாய்ப்புக்களை உருவாக்குதல், வறுமை ஒழிப்புத்திட்டங்களை வலுப்படுத்தல், ஆரோக்கியமான மனித வளத்தை உருவாக்குதல், மகிழ்ச்சியான நல்வாழ்வுக்கான சுற்றுச் சூழலைப் பேணுதல் போன்ற கொள்கை நடைமுறைகள் நிகழ்காலத்தில் இன்றியமையாதவையாகக் காணப்படுகின்றன.

இவ்வாறான சூழ்நிலையில் அமைதி மற்றும் செழிப்பு மிக்க சமுதாயத்தைக் கட்டியெழுப்பக்கூடிய நடைமுறைச் சாத்தியமான விடையப்பரப்புகளை உள்ளடக்கிய முகாமைத்துவ மற்றும் வணிக துறைகளில் நடத்தப்படுகின்ற ஆய்வுகளானவை மிகவும் பயனுறுதி வாய்ந்தனவாகக் காணப்படுகின்றன.

குறிப்பாக மனிதவளம், நிதி, வர்த்தகம், பொருளாதாரம், தொழில்நுட்பம் மற்றும் சந்தைப்படுத்தல் சார் சவால்களைத் தீர்க்கக்கூடிய பொறிமுறைகளை நிறுவுவதுடன் நிலைபேறான அபிவிருத்திக் கும் பொருளாதார வளர்ச்சிக்கும் வழி கோலும் முகமாக இந்த ஆய்வுகள் அமையப்பெறுகின்றன.

நீண்டகால அபிவிருத்தியை மையமாக கொண்டு இயங்குகின்ற தனியார் மற்றும் அரச நிறுவனங்களின் உற்பத்தித்திறனை அதிகரிக்கவல்ல தந்திரோபாயங்களைக் கண்டறிதல் மற்றும் கொள்கைத் தீர்மானங்களை வகுத்தல் போன்றன பெரும்பாலான முகாமைத்துவம் மற்றும் வணிகம் சார் ஆய்வுகளின் முடிவுகளாகின்றன.

அந்தவகையில் இந்த ஆய்வு மாநாடு தனியே நிலைபேறான அபிவிருத்தியின் சமகால மாற்றத்தை மட்டுமல்லாது எதிர்காலத் திட்டங்களை முன்கூட்டியே வகுக்கக்கூடிய நிலைபேறான அபிவிருத்தியை உருவாக்கக்கூடிய வணிகச் செயற்பாடுகளை ஆய்வின் முடிவுகளாக வேண்டி நிற்கின்றன.

அதாவது தற்காலத் தீர்வுகளை வழங்கவல்ல நிலைபேறற்ற அபிவிருத்தியின் மோசமான விளைவுகளைத் தவிர்க்க வல்ல நீண்டகால பொருளாதார விருத்தியை ஏற்படுத்தக்கூடிய பிராந்திய, தேசிய மற்றும் சர்வதேச அளவிலான அபிவிருத்தியை நோக்கியதான பார்வையில் இந்த 6 ஆவது சர்வதேச ஆய்வு மாநாடு தனது கருப்பொருளை உருவாக்கியுள்ளது.

இது வணிகங்களை முகாமை செய்தல், மனிதவள முகாமைத்துவம், நிறுவன நடத்தை, நிறுவன தொழில்நுட்பம், நிதி மற்றும் கணக்கியல், சந்தைப்படுத்தல், சுற்றுலாத்துறை மற்றும் பொருளாதார சமூகக்கொள்கைகள் போன்ற ஆய்வுப் பரப்புகளைக் கொண்டுள்ளது.

தெரிவு செய்யப்பட்ட ஆய்வுக் கட்டுரைகள் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் ஆய்வு இதழ்களில் பிரசுரிக்கக்கூடிய சந்தர்ப்பமானது பிரத்தியேகமாக வழங்கப்படுகின்றது ஆய்வாளர்கள் ஆய்வுக் கட்டுரைகளை மாசி மாதம் 26 ஆம் திகதி வரை சமர்ப்பிக்க முடியும்.

முதல்முறையாக உலகப் புகழ் வாய்ந்த பேராசிரியர்களான ஐ.எம். பாண்டி, ஏ.பரசுராமன் மற்றும் ஹரி டெஸிலர் ஆகியோர் முதன்மைப் பேருரைகளை நடத்தவிருக்கின்றார்கள். இந்த ஆய்வு மாநாட்டின் ஏற்பாட்டுத் தலைவராக முகாமைத்துவ கற்கைகள் மற்றும் வணிக பீடத்தைச் சேர்ந்த கலாநிதி. ந. கெங்காதரன் செயற்படுகின்றார்.

இந்த ஆய்வு மாநாடு தொடர்பான மேலதிக தகவல்களை https://iccm.maco.jfn.ac.lk என்ற இணையத்தளத்தில் பெற்றுக்கொள்ள முடியும்.

# வவுனியாவில் தாயும் பிள்ளையும் நேற்று கிணற்றிலிருந்து சடலங்களாக மீட்பு!

வவுனியா பறண்நட்டகல் பகுதியில் கிணற்றில் இருந்து தாயினதும் அவரது மூன்று வயது குழந்தையினதும் சடலங்களை ஓமந்தை பொலிஸார் மீட்டுள்ளனர்.

இருவரும் நேற்று முன்தினம் அவர்களது வீட்டில் இருந்துள்ளனர். எனினும் இரவு 12 மணியளவில் காணாமல்போயிருந்த நிலையில் ஊர்மக்கள் மற்றும் உறவினர்கள் அவர்களைத் தேடியுள்ளனர்.

இந்நிலையில் நேற்றையதினம் காலை வீட்டிற்கு அருகில் இருந்த வயல் கிணறுஒன்றில் இருந்து அவர்கள் இருவரும் சடலங்களாக மீட்கப்பட்டுள்ளனர்.

சம்பவத்தில் அதே பகுதியை சேர்ந்த ரமேஸ் ஜெயலலிதா (வயது 42), மற்றும் அவரது மூன்று



வயது மகளான நிதுர்சனா ஆகியோரே சடலமாக மீட்கப்பட்டனர்.

சடலங்கள் மீட்கப்பட்டு உடற்கூற்று பரிசோதனைக்காக வவுனியா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பாக ஓமந்தை பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துவருகின்றனர்



**கிரீன் பீல்ட் சனசமூக நிலையத்தினரால் - நேற்று முன்தினம் 27.12.2020 அன்று நத்தார் தினத்தை முன்னிட்டு 120 மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன.**

# மேல்மாகாணத்தில் இருந்து வெளியேறிய 54 பேருக்கு கொரோனாத் தொற்றுறுதி

மேல்மாகாணத்தில் இருந்து வெளியேறி வெளிமாவட்டங்களுக்கு செல்லும் மக்களுக்கு மேற்கொள்ளப்படும் பரிசோதனையில் 54 பேருக்கு தொற்று இருப்பது கண்டறியப்பட்டுள்ள நிலையில் தொடர்ந்தும் 'ரெப்பிட் எண்டிஜன்' சோதனை முன்னெடுக்கப்படும் என பொலிஸ் ஊடகப்பேச்சாளர் பிரதிப்பொலிஸ் மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.



கொழும்பு, களுத்துறை, மற்றும் கம்பஹா ஆகிய மாவட்டங்களில் கொவிட் தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளமையை அடுத்து மேல் மாகாணத்திலிருந்து வெளியேறுபவர்களிடம் கொவிட் 19 தொற்று காணப்படலாம் என்ற சந்தேகத்தில் இந்த பரிசோதனைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

கடந்த 18 ஆம் திகதியிலிருந்து மேல் மாகாணத்திலிருந்து வெளியேறுபவர்களுக்கு 11 இடங்களில் குறித்த பரிசோதனைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

கடந்த 18 ஆம் திகதி முதல் இதுவரையில் 8 ஆயிரத்து 600 பேருக்கு 'ரெப்பிட் எண்டிஜின்' பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

நேற்றைய தினம் ஆயிரத்து 100 பேருக்கு 'ரெப்பிட் எண்டிஜின்' பரிசோதனை மேற்கொள்ளப்பட்டதில் அவர்களில் 5 பேர் அடையாளம் காணப்பட்டிருந்தனர்.

இவ்வாறு மேல் மாகாணத்தில் இருந்து வெளியேறுபவர்களுக்கு எழுமாற்றாக மேற்கொள்ளப்படும் ரெப்பிட் எண்டிஜின் பரிசோதனையில் கொவிட் - 19 தொற்றுறுதியான 54 பேர் இதுவரை அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இந்தநிலையில் மேல்மாகாணத்தில் வெளியேறும் பகுதிகளில் தொடர்ந்தும் ரெப்பிட் எண்டிஜின் பரிசோதனைகள் மேற்கொள்ளப்படுவதாக காவல்துறை பேச்சாளர் பிரதிகாவல்துறை மா அதிபர் அஜித் ரோஹண மேலும் தெரிவித்தார்.

காலைக்கதிர்
Kalaikkathir

## சடலங்கள் எரிப்புக்கு எதிர்ப்பு யாழில் இன்றும் ஆர்ப்பாட்டம்




(எஸ்.நிதர்ஷன்)

கொரோனா வைரஸ் தொற்றால் முஸ்லிம்கள் மற்றும் கிறிஸ்தவர்கள் ஆகியோரின் சடலங்கள் எரிக்கப்படுவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து யாழ்ப்பாணத்தில் இன்று கவனயீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

முஸ்லிம் சமூகத்தின் ஏற்பாட்டில் யாழ். மத்திய பஸ் நிலையத்துக்கு முன்பாக காலை இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இந்தப் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள், “அரசே உமது பலத்தை சிறுபான்மையினர் மீது கட்டவிழ்க்காதே”, “கிறிஸ்தவ மற்றும் முஸ்லிம்களின் மத விழுமியங்களில் கைவைக்காதே”, “கொரோனாவால் மரணிக்கும் முஸ்லிம்கள் மற்றும் கிறிஸ்தவர்களின் சடலங்களை நல்லடக்கத்துக்கு அனுமதியளித்திடு”, “இலங்கை அரசே ஜனாஸாக்களை எரிக்காதே, ஜனாஸாக்களில் இனவாதம் வேண்டாம்” - என எழுதப்பட்ட பதாகைகளை ஏந்தியிருந்தனர்.

முஸ்லிம் அமைப்புகளின் பிரதிநிதிகள், தமிழ்க் கட்சிகளின் பிரதிநிதிகள், மதத் தலைவர்கள் மற்றும் பொதுமக்கள் எனப்பலரும் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது.

# உள்ளக சுயநிர்ணயத்தை மறுத்தால் வெளிப்புற சுயநிர்ணயம் கோரலாம்!

## அதனை நினைவூட்டி தமிழ்க் கூட்டமைப்பு யோசனை புதிய அரசமைப்பு உருவாக்கல் குழுவுக்கு சமர்ப்பிப்பு

ஒரு மக்கள் கூட்டத்துக்கு உள்ளக சுய நிர்ணய உரிமை தொடர்ந்து மறுக்கப்படுமானால் அவர்கள் சர்வதேச சட்டத்தின் கீழ் வெளிப்புற சுய நிர்ணய உரிமைக்கு உரித்துடையவர்கள் என்பதை நினைவு படுத்துகிறோம்.

- புதிய அரசமைப்பு உருவாக்கத்துக்காக தமிழ் தேசியக் கூட்டமைப்பு இன்று சமர்ப்பித்த யோசனைத் திட்டத்தில் இந்த விடயம் இடம்பெற்றுள்ளது.

புதிய அரசமைப்பு உருவாக்கத்துக்கான நிபுணர்கள் குழுவுக்கு கூட்டமைப்பின் யோசனைகளை கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் இன்று அனுப்பி வைத்தார்.

இலங்கைத் தமிழரசுக் கட்சி என்ற பெயரில் நாடாளுமன்றத்தில் இயங்கும் - இலங்கைத் தமிழசுக் கட்சி, தமிழீழ விடுதலைக் கழகம் (ரெலோ), தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம்(புளொட்) ஆகியவற்றின் கூட்டான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் - இந்த கருத்துக்களைத் தாம் முன் வைக்கின்றார் எனத் தெரிவித்து சம்பந்தன் மேற்படி குழுவுக்கு இன்று காலை கூட் டமைப்பின் யோசனைகளை அனுப்பி வைத்தார்.

இருபத்தியொரு பக்கங்களைக் கொண்ட இந்த யோசனைத் திட்டத்தில் மேலும் கூறப்பட்டுள்ள முக்கிய விடயங்கள் வருமாறு:

★ பதின்மூன்றாவது திருத்தத்திற்குப் பின்னர் ஏற்படுத்தப்பட்ட அனைத்து யோசனைகளும், இணக்கப்பாடுகளும், வாக்குறுதிகளும் ஒற்யைாட்சியை விடுத்து சமஷ்டிக் கட்டமைப்பிலான ஆட்சி முறையைத்தான் பிரேரித்திருத்தன.

★ புதியதொரு அரசமைப்பு வரையப்படுவதாக இருந்தால் அர்த்தமுள்ள விதமாக அரச அதிகாரங்கள் பகிரப்படுவது அதன் மையப் பொருளாக இருக்க வேண்டும்.

★ மத்திய மற்றும் பிராந்தியங்களின் ஐக்கியத்தைக் கொண்டதாக அரசு முறைமை அமைய வேண்டும். அதில் ஒரு பிராந்தியமாகத் தமிழ்ப் பேசும் மக்களின் பிரதான வாழிடமான வடக்கு - கிழக்கு இருத்தல் வேண்டும்.

★ நாடாளுமன்றம் இரண்டு சபைகளைக் கொண்டிருக்கும். முதல் சபை நேரடியாக மக்களினால் தெரிவு செய்யப்படும். இரண்டாவது சபை பிராந்தியகளின் பிரதிநிதிகளைக் கொண்டிருக்கும்.

★ சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மூன்றும் அரச கரும மொழியாக வேண்டும்.

★ நாடாளுமன்றத்துக்குப் பதில் கூறக் கூடிய சம்பிரதாயபூர்வ ஜனாதிபதி பதவியில் இருப்பார். பிரதமரின் ஆலோசனைப்படி அமைச்சர்களை ஜனாதிபதி நியமிப்பார். அமைச்சர்களின் அமைச்சுக்களைத் தீர்மானிக்கும் அதிகாரம் பிரதமரிடம் இருக்க வேண்டும்.

★ ஒவ்வொரு பிராந்தியத்துக்கும், பிராந்திய கவுன்ஸிலின் அங்கீகாரத்துக்கு அமைய முதலமைச்சர் வழங்கும் பரிந்துரைப்படி ஆளுநர்களை ஜனாதிபதி நியமிக்க வேண்டும்.

★ பின்வரும் துறைகளின் அதிகாரங்கள் பகிரப்பட வேண்டும்:-

காணி, சட்டமும் ஒழுங்கும், கல்வி, சுகாதாரம், வீடமைப்பு மற்றும் கட்டடங்கள், விவசாயமும் விவசாய சேவையும், நீர்ப்பாசனம், கடற்றொழில், விலங்கு வேளாண்மை, கால்நடை வளர்ப்பு, மீள் குடியமர்வும் புனர்வாழ்வும், உள்ளூராட்சி நிர்வாகம், பிராந்திய பொதுச் சேவைகள் மற்றும் கலாசார விடயங்கள், ஏனைய சமூகப் பொருண்மிய மற்றும் கலாசார விடயங்கள், கூட்டுறவு மற்றும் கூட்டுறவு வங்கிகள், தொழிற்சாலைகள், வரிவிதிப்பு, மத்திய நிதியளிப்பு, சர்வதேச மற்றும் உள்ளூர் கடன்கள், மானியங்கள், வெளிநாட்டு நேரடி முதலீடுகள்.

★ நீதித்துறையில் அரசமைப்பு நீதிமன்றங்கள் தனியாக இருக்க வேண்டும். பிராந்திய மேல் நீதிமன்றங்களே அடிப்படை உரிமை மீறல் விடயங்களை விசாரிக்கும் நியாயாதிக்கம் கொண்டவையாக இருக்க வேண்டும்.

★ பிராந்திய முதலமைச்சரின் இணக்கத்துடன் தான் பிராந்தியங்களில் அவசரகாலச் சட்டம் பிறப்பிக்கப்படலாம். அது பின்னர் பிராந்திய கவுன்ஸிலினால் அங்கீகரிக்கப்படவும் வேண்டும்.

★ காணி அதிகாரம் பிராந்தியத்துக்குப் பகிரப்பட வேண்டும்.

★ சட்டமும் ஒழுங்கும் பிராந்தியங்களுக்குப் பகிரப்பட்டமையால், தேசியப் பொலிஸ் போன்று ஒவ்வொரு பிராந்தியத்துக்கும் பிராந்திய பொலிஸ் இருத்தல் வேண்டும்.

- இந்த விடயங்கள் அந்த யோசனைத் திட்டத்தில் விரிவாக உள்ளன.

கூட்டமைப்பின் மூன்று பங்காளிக் கட்சிகளின் சார்பில் கூட்டமைப்புத் தலைவர் இரா.சம்பந்தன் ஒப்பமிட்டு இந்த யோசனைத் திட்டத்தை அனுப்பி வைத்துள்ளார். (உ)

## சம்பிக்க, பொன்சேகா, ராஜித, வெல்கமவுக்கு சஜித் அணியில் சிரேஷ்ட உப தலைவர் பதவி



6 சிரேஷ்ட உப தலைவர்களையும், 5 உப தலைவர்களையும் நியமிப்பதற்கு ஐக்கிய மக்கள் சக்தி தீர்மானித்துள்ளது. கட்சியின் புதிய யாப்பின் பிரகாரமே இதற்கான நடவடிக்கை முன்னெடுக்கப்படவுள்ளது.

இதன்படி சம்பிக்க ரணவக்க, ராஜித சேனாரத்ன, சரத் பொன்சேகா, குமார வெல்கம, தலதா அத்துகோரல மற்றும் இம்தியாஸ் பாக்கீர் மாக்கார் ஆகியோர் சிரேஷ்ட உப தலைவர்களாக நியமிக்கப்படுவார்கள் என எதிர்ப்பார்க்கப்படுகின்றது.

அத்துடன், ரவி சமரவீர, அஜித் பீ பெரேரா, சுஜீவ சேனசிங்க, சந்ராணி பண்டார, ரஞ்சன் அளுவிகார ஆகியோருக்கு உப தலைவர் பதவி வழங்கப்படவுள்ளது.

ஐக்கிய மக்கள் சக்தியின் தவிசாளராக கபீர் ஹாசீமும், உப செயலாளராக அசோக அபேசிங்கவும் செயற்படவுள்ளனர்.

ஐக்கிய மக்கள் சக்தியின் புதிய யாப்புக்கு அக்கட்சியின் நிறைவேற்றுக்குழு பண்டாரவளையில் நடைபெற்ற கூட்டத்தின்போது ஒப்புதல் வழங்கியது.

குறித்த யாப்பின் பிரகாரம் புதிய உறுப்பினர்கள் தேர்வு ஜனவரியில் நடைபெறவுள்ளது.

தலைவர் உட்பட நிர்வாகப் பதவிகளுக்கு வருடாந்தம் உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட வேண்டும். செயற்குழுவுக்கு 80 பேரை உள்வாங்குவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.

அதேபோல் அரசியல் கூட்டணியொன்றை அமைப்பதற்கும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அவ்வாறு அமைந்த பின்னர் தலைமைத்துவ சபையொன்று உருவாக்கப்படவுள்ளது.

## தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தி யாழ்ப்பாணத்தில் போராட்டம்!

### கட்சி பேதமின்றி அரசியல்வாதிகள் ஓரணியில் பங்கேற்பு






(எஸ்.நிதர்ஷன்)

சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தி யாழ்ப்பாணத்தில் இன்று கவனயீர்ப்புப் போராட்டம் நடத்தப்பட்டது.

‘அரசியல் கைதிகள் விடுதலைக்கான குரலற்றவர்களின் குரல்’ அமைப்பின் ஏற்பாட்டில் நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தின் பின் வீதியில் இன்று காலை இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இதில் அரசியல் கட்சிகளின் தலைவர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், முன்னாள் மாகாண சபை உறுப்பினர்கள், உள்ளூராட்சி சபைகளின் தலைவர்கள்,உறுப்பினர்கள், மதத் தலைவர்கள், அரசியல் கைதிகளின் உறவினர்கள் மற்றும் பொதுமக்கள் உள்ளிட்ட பலர் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றிக் கலந்துகொண்டனர்.

சிறைகளில் தடுத்து வைக்கப்பட் டுள்ள தமிழ் அரசியல் கைதிகள் பலருக்குக் கொரோனா வைரஸ் தொற்று ஏற்பட்டுள்ள நிலையில், அவர்களின் உயிர் பாதுகாப்பை உடனடியாக உறுதிப்படுத்துமாறும், அவர்களை உடனடியாக விடுதலை செய்ய நடவடிக்கை எடுக்குமாறும் போராட் டத்தில் கலந்துகொண்டவர்கள் வலியுறுத்தினர்.

## ‘கொரோனா’விலிருந்து 33,221 பேர் குணமடைவு

கொரோனா வைரஸ் தொற்றுக்கு இலக்கான நிலையில் சிகிச்சை பெற்று வருபவர்களில் மேலும் 520 பேர் இன்று குணமடைந்து வீடு திரும்பினர்.

இதன்படி இலங்கையில் கொரோனாவின் பிடிக்குள் இருந்து மீண்டவர்களின் எண் ணிக்கை 33 ஆயிரத்து 221 ஆக அதிக ரித்துள்ளது.

அத்துடன் 7 ஆயிரத்து 642 பேருக்கு தொடர்ந்தும் சிகிச்சையளிக்கப்பட்டு வருகின்றது. கொரோனாவால் இதுவரை 191 பேர் உயிரிழந்துள்ளனர்.

## ‘தம்மிக்க பாணி’ அருந்தியவருக்கும் கொரோனா வைரஸ் தொற்று உறுதி

வறக்காப்பொல பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பகுதியில் 12 கொரோனா வைரஸ் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர் எனவும், அவர்களில் ஒருவர்

கேகாலை ஆயுர் வேதப் பாணியை அருந்தியவர் எனவும் சுகாதார பரிசோதகர் தெரிவித்தார் என ’திவயின’ நாளிதழ் செய்தி வெளியிட்டுள்ளது.

தொற்றாளர்கள் கொரோனா சிகிச்சை நிலையங்களுக்கு அனுப்பிவைக்கப்பட் டுள்ளனர். அவர்களுடன் தொடர்பில் இருந்தவர்கள் சுய தனிமைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

# கொரோனாவால் மரணித்தோரை அடக்கம் செய்ய வடக்கு, கிழக்கில் இரண்டு இடங்கள் பரிந்துரை!

## அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தகவல்

கொரோனா வைரஸ் தொற்று நோயால் உயிரிழக்கும் முஸ்லிகளின் உடல்களை அடக்கம் செய்வதற்குப் பொருத்தமான இரண்டு இடங்கள் அடையாளம் காணப் பட்டுள்ளன என அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

நிலத்தடி நீர் மட்டம் மிக ஆழமாக இருக்கும் இரண்டு இடங்கள் அடையாளம் காணப்பட்டு அறிக்கையிடப்பட்டுள்ளன எனவும் நீர்வழங்கல் அமைச்சர் வாசுதேவ நாணயக்கார கூறினார்.

மன்னாரில் மறிச்சுக்கட்டு மற்றும் கிழக்கு மாகாணத்தில் ஏரகம ஆகிய இடங்களில் நிலத்தடி நீா மட்டம் 30 அடிக்குக் கீழே உள்ளது. இந்நிலையில் இந்த இடங்கள் கொரோனாவால் உயிரிழந்தவர்களைப் புதைக்க ஏற்றவை எனவும் அவர் கூறியுள்ளார்.

முஸ்லிம்களின் உடல்களை அடக்கம் செய்யும்போது அவர்களின் உடலில் இருக்கும் கொரோனா வைரஸ் நிலத்தடி நீருடன் கலந்து பரவலாம் என இலங்கை அரசு தரப்பில் கூறப்படுகிறது.

எனவே, நிலத்தடி நீர் மிக ஆழமாக உள்ள பொருத்தமான இடங்கள் குறித்து ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு நீா வழுங்கல் அமைச்சா வாசுதேவவிடம் கோரப்பட்டிருந்தது.

இதனையடுத்து அமைச்சின் புவியியலாளர்கள் ஆய்வு செய்து நிலத்தடி நீடி மிகவும் ஆழமாகக் காணப்படும் இரு இடங்களை அடையாளம் கண்டு அறிக்கையளித்துள்ளனா்.

இந்த அறிக்கை பிரதமா் மஹிந்த ராஜபக்ஷ மற்றும் சுகாதார அமைச்சரிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார்.



## கல்முனை சந்தையில் தொற்றுச் சோதனை; கடைகளை மூடிவிட்டு வர்த்தகர்கள் ஓட்டம்!

### 27 பேருக்கு நேற்று கொரோனா உறுதி

கல்முனை, டிசெம்பர் 29

கல்முனை மாநகர பொதுச் சந்தை பகுதியை இராணுவத்தினர் பொது சுகாதார அதிகாரிகளுடன் நேற்று திங்கட்கிழமை சுற்றிவளைத்து அங்குள்ளவர்களுக்கு பி.சி.ஆர். மற்றும் அன்டிஜன் பரிசோனைகளை மேற்கொண்டபோது அங்கிருந்தி சில வர்த்தகர்கள் கடைகளை அவசராமக மூடிவிட்டு தலைமறைவாகியுள்ளனர் எனக் கூறப்படுகின்றது.

அதேவேளை அங்கு 200 பேருக்கு மேற்கொண்ட பரிசோதனையில் 27 பேருக்கு கொரோனா தொற்றுதி கண்டறியப்பட்டுள்ளது.

கல்முனை தெற்கு சுகாதாரப் பிரிவில் கொரோனா தொற்று தீவிரமடைந்த நிலையில் நேற்றுத் திங்கட்கிழமை கல்முனை மாநகர பொதுச்சந்தையை காலையில் இராணுவத்தினர் திடீரென சுற்றிவளைத்து சந்தைப்பகுதிக்கு செல்லவோ வெளியேறவோ முடியாதவாறு பாதுகாப்பு நடவடிக்கையில் ஈடுபட்டனர் .

இந்த நிலையில் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஜீ சுகுணனின் நேரடி கண்காணிப்பில் பொதுசுகாதார அதிகாரிகள் அந்த பகுதியில் வியாபார நடவடிக்கையில் ஈடுபட்ட மற்றும் பொருள்களைக் கொள்வனவு செய்யச் சென்றவர்கள் உட்பட 200 பேருக்கு பி.சி.ஆர். மற்றும் அன்டிஜன் பரிசோதனைகளை எழுமாற்றாக மேற்கொண்டனர்.

இதன்போது சந்தைவர்த்தக சங்கத்தினர் முழு ஒத்துழைப்பையும் வழங்கினர்.

இருந்தபோதும் சில கடை வர்த்தகர்கள் திடீரென கடைகளை மூடிவிட்டு அங்கிருந்து தலைமறைவாகியுள்ளனர் எனத் தெரியவருகின்றது.

தொற்றுக் கண்டறியப்பட்ட 27 பேரையும் வைத்தியசாலைக்கு அனுப்பிவைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது.

இவர்களுடன் தொடர்புபட்டவர்களை தனிமைப்படுத்தும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

நேற்றுத் திங்கட்கிழமை காலை 10 மணிவரையில் கல்முனை தெற்கு சுகாதார பிரிவில் 144 பேருக்கும் கல்முனை வடக்கு சுகாதார பிரிவில் 11 பேருக்கும் கொரோனா தொற்றுக்குள்ளாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## வாழ்வாதாரத்தை இழந்துள்ளனர் என திருகோணமலை மீனவர்கள் கவலை!

காலநிலை மாற்றம் காரணமாக திருகோணமலை மாவட்ட மீனவர்கள் தமது தொழிலை மேற்கொள்ள முடியாது பாதிக்கப்பட்டுள்ளனர். தொடர்ச்சியாக பெய்துவரும் கனமழை காரணமாக தாம் கடலுக்கு செல்ல முடியாதிருப்பதாக மீனவர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

மேலும், கொரோனா பேரிடர் காரணமாக தொழிலை மேற்கொள்ள முடியாமலிருந்த காலப் பகுதியில் தாம் மிகவும் அல்லலுற் றனர் எனத் தெரிவித்த மீனவர்கள், தற்போது ஏற்பட்டுள்ள காலநிலை மாற்றம் காரணமாக தாம் முற்றாக பாதிக்கப்பட்டுள்ளனர் எனத் தெரிவித்தனர்.

அத்துடன் மீன்பிடிக்கச் செல்வதற்கு தம் உயிரைப் பணயம் வைத்து கட லுக்கு செல்லவேண்டிய நிலைக்குத் தாம் தள்ளப்பட்டுள்ளனர் எனவும் தற்போது பிடித்து வரும் மீன்களை சந்தைப்படுத்தவும் போதிய விலை கிடைக்காதமையால் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ள தாகவும் மீனவர்கள் தெரிவித்தனர்.

## வல்லைப் பாலத்தினுள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...

குறித்த வாகனம், வீதியை விட்டு விலகி பாலத்தில் பாய்ந்தது எனவும், அதில் பயணித்த இருவரே படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை, இயக்கச்சியில் நேற்று கண்டெய்னர் வாகனம் ஒன்று வீதியில் சரிந்து விழுந்து விபத்துக்கு உள்ளானது. எனினும், எந்தவொரு உயிர்ச் சேதமும் ஏற்படவில்லை.



## மகோற்சவத்தில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...

பட்டுள்ளனர்.

எனினும், ஆலயத்தில் பூஜைகள் நடைபெறுவதற்குத் தடை விதிக்கப்படவில்லை. பக்தர்கள் ஆலயத்தினுள் செல்லாமல் வெளியே, ஆலய வளாகத்தில் நின்று இறை வழிபாட்டில் ஈடுபட முடியும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆலயத்தில் மகோற்சவ கிரியைகளை நடத்திய அர்ச்சகர்களும் ஆலய பரிபாலன சபையைச் சேர்ந்தவர்களும் ஆலயத்திலும் வீடுகளிலும் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

மேலும், தேர், தீர்த்த உற்சவ உபயகாரர்கள், மகோற்சவ ஆரம்பம் தொடக்கம் முடிவடையும் வரை தொடர்ந்து ஆலயத்துக்கு வருகை தந்தவர்கள், தீர்த்தோற்சவத்தின்போது கடலில் மிக நெருக்கமாக நின்றவர்கள் ஆகியோரையும் தனிமைப்படுத்தும் நடவடிக்கை இடம்பெற்று வருகின்றது.

வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரனின் அறிவுறுத்தலுக்கு அமைய சங்கானை சுகாதார வைத்திய அதிகாரி பொ.யசிதரனின் வழிப்படுத்தலில் பொன்னாலை பொதுச்சுகாதாரப் பரிசோதகர் ச.சர்மிலன் இந்த நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளார்.

கொரோனாத் தடுப்பு செயலணியால், ஆலயத் திருவிழாக்களின்போது 50 பேருக்கு மட்டும் அனுமதி வழங்கப்பட்டிருக்கின்றது. இதற்கமைய பொன்னாலை வரதராஜப் பெருமாள் ஆலயத்துக்கு வருகைதந்த பக்தர்களின் பெயர்கள் நுழைவாயிலில் வைத்து பதிவு செய்யப்பட்டு 50 பேர் மட்டும் ஆலயத்தினுள் செல்ல அனுமதிக்கப்பட்டிருந்தனர்.

பக்தர்களுக்கு தொற்று நீக்கல் திரவம் வழங்கப்பட்டது. முகக்கவசம் இல்லாதவர்களுக்கு ஆலய பரிபாலன சபை அவற்றை வழங்கியிருந்தது. ஆலய வளாகத்திலும் முகப்பிலும் கொரோனா தொடர்பான விழிப்புணர்வு பனர்கள் கட்டப்பட்டு துண்டுப்பிரசுரங்களும் ஒட்டப்பட்டிருந்தன.

எனினும், திருவடிநிலை புனித தீர்தக்கரையில் நடைபெற்ற தீர்த்தோற்சவத்தின்போது ஆலயத்திற்கு வருகை தராமலேயே வேறு மார்க்கங்களால் பக்தர்கள் அங்கு சென்றிருந்தனர்.

ஏற்கனவே கடலுக்குச் சென்று நீராடிக்கொண்டிருந்த பலர் சுவாமி தீர்த்தமாடச் சென்றபோது திடீரென சுவாமிக்கு அண்மையில் சென்று சுற்றிவர நின்று வழிபட்டனர். அந்தப் புகைப்படங்கள் சமூக வலைத்தளங்களில் வெளியாகியிருந்தன.

இதனால், ஆலய மகோற்சவத்தின்போது சமூக இடைவெளி பேணப்படவில்லை மற்றும் முகக்கவசம் அணிந்திருக்கவில்லை எனக் கொரோனா தடுப்பு செயலணிக்கு சமூக ஆர்வலர்கள் சிலர் முறைப்பாடு செய்திருந்தனர் எனத் தெரியவருகின்றது. இதைத் தொடர்ந்தே தனிமைப்படுத்தல் உத்தரவு பிறப்பிக்கப்பட் டுள்ளது.

இதேவேளை, சுகாதாரத்துறையின் அறிவுறுத்தல்களைப் பின்பற்றுவதுடன் அவர்களின் நடவடிக்கைகளுக்கு தாம் பூரண ஒத்துழைப்பை வழங்குவார்கள் என ஆலய பரிபாலன சபையினர் தெரிவித்துள்ளனர்.



# பாதுகாப்பு பிரிவில் ஒருவருக்கு கொரோனா உறுதி; சபாநாயகரும் தனிமைப்படுத்தலுக்கு உட்படுவார்?

சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தவின் பாதுகாப்பு பிரிவு உத்தியோகத்தர் ஒருவருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ள நிலையில் சபாநாயகர் மற்றும் அவரது குடும்பத்தினர் சிலரும் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்படும் நிலை ஏற்பட்டுள்ளதாக கொழும்பு தகவல்கள் மூலம் அறிய முடிகிறது.

இது குறித்து மேலும் தெரியவருகையில் -

சபாநாயகரின் பாதுகாப்பு பிரிவில் உள்ள அதிகாரி ஒருவருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. இவ்வாறு தொற்று உறுதி செய்யப்பட்ட அதிகாரி சபாநாயகர் அலுவலகத்தில் உள்ள அனைவருடனும் நெருக்கமாக இருந்து நடமாடியுள்ளார்.

இதையடுத்து தொற்றாளருடன் முதற்கட்ட தொடர்பாளர்கள் என்ற அடிப்படையில் அடையாளம் காணப்பட்ட சபாநாயகர் அலுவலகத்தில் உள்ள ஊழியர்களில் பலர் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர் எனத் தெரிகிறது.

சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன மற்றும் அவரது குடும்ப உறுப்பினர்கள் சிலர் தொற்றாளரடன் இரண்டாம் கட்ட தொடர்பில் அடையாளப்படுத்தப்பட்டுள்ளனர்.

தொற்றாளருடன் முதற்கட்ட தொடர்பில் அடையாளம் காணப்பட்டு தனிமைப்படுத்தப்பட்டுள்ள ஊழியர்களின் பி.சி.ஆர். பரிசோதனை முடிவுகளில் அவர்களில் எவருக்கேனும் தொற்று உறுதி செய்யப்படும் பட்சத்தில் சபாநாயகரும் அவரது குடும்பத்தினரும் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்படலாம் எனத் அத்தகவல்கள் மூலம் மேலும் அறிய முடிகிறது.

இதேவேளை, அண்மையில் கொரோனா வைரஸ் தொற்று உறுதியாகிய விவசாய திணைக்களப் பணிப்பாளருடன் நெருக்கமாக இருந்துள்ளமை கண்டறியப்பட்டதை அடுத்து ஜனாதிபதி, பிரதமர் ஆகியோரின் சகோதரரான அமைச்சர் சமல் ராஜபக்ஷ தனிமைப்படுத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## 9 மாதங்களின் பின் முதல் தடவை 185 சுற்றுலாப் பயணிகள் வருகை

### மத்தள நிலையத்தில் வரவேற்பு





ஒன்பது மாதங்களின் பின் முதல் தடவையாக 185 சுற்றுலாப் பயணிகள் நேற்று இலங்கைக்கு வருகை தந்தனர்.

உக்ரைன் நாட்டின் மலிவு விலை விமான சேவை நிறுவனமான ‘ஸ்கையப்’ நிறுவனத்திற்குச் சொந்தமான விமானம் நேற்று மதியம் 2.40 மணியளவில் மத்தள சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந்தது.

விசேடமாக வாடகைக்கு அமர்த்தப்பட்ட இந்த விமானம் மூலம் 185 உக்ரைனிய சுற்றுலாப் பயணிகள் நேற்றுவந்தடைந்தனர். இவர்கள் இங்கு 10 முதல் 14 நாள்கள் தங்கியிருப்பார்கள் என சுற்றுலாத்துறை அறிவித்துள்ளது.

கொவிட் 19 காரணமாக கடந்த மார்ச் நாடு முடக்கப்பட்டதன் பின் இலங்கைக்கு வரும் முதலாவது சுற்றுலாக் குழு இதுவாகும்.

இதன் தொடர்ச்சியாக வரும் வாரங்களில் இதுபோன்ற இன்னும் 13 விமானங்கள் வருகை தர இருக்கின்றன என மத்தள விமான நிலைய வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இந்தப் பரீட்சார்த்த நடவடிக்கையின் வெற்றிக்குப் பின்னர் நாட்டில் உள்ள அனைத்து விமான நிலையங்களும் சுற்றுலாப் பயணிகளுக்காகத் திறக்கப்படுமென விமான போக்குவரத்து சேவை பணிப்பாளர் சுமண சேகர தெரிவித்துள்ளார்.

## கல்மடுவில் யானை இறந்த சம்பவம்: கைதான நபர் பிணையில் விடுதலை!





கிளிநொச்சி, டிசெ.29

கிளிநொச்சி கல்மடு பிரதேசத்தில் யானை உயிரிழந்த சம்பவம் தொடர்பில் கைதான நபர் பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளார். நேற்று முன்தினம் இரவு கைது செய்யப்பட்ட சந்தேக நபர் நேற்று கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டார்.

இதன்போது அந்த சந்தேக நபர் பிணையில் விடுதைலை செய்யப்பட்டுள்ளார் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கிளிநொச்சி கல்மடு பகுதிக்கு வந்த காட்டு யானை வயலை சேதமாக்கி அழித்துள்ளதுடன், அப்பகுதியில் உயிரிழந்துள்ளது.

நேற்று முன்தினம் காலை வயல் நிலத்தை பார்வையிட சென்ற பொது மக்கள் யானை உயிரிழந்திருப்பது தொடர்பில் கிராமசேவையாளர் ஊடாக வனஜீவராசிகள் திணைக்களம் மற்றும் பொலிஸாருக்குா தகவல் வழங்கியுள்ளனர். யானை உயிரிழந்தமை தொடர்பான மேலதிக விசாரணைகளை தர்மபுரம் பொலிஸாரும், வன ஜீவராசிகள் திணைக்களமும் மேற்கொண்டு வந்தனர்.

குறித்த யானை சட்டவிரோதமாக அமைக்கப்பட்ட மின் இணைப்பில் சிக்கி உயிரிழந்துள்ளதாக ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.

இந்நிலையில் கல்மடு பகுதியை சேர்ந்த ஒருவரை வன ஜீவராசிகள் திணைக்களத்தார் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை கைது செய்துள்ளனர். சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வந்த நிலையில் குறித்த சந்தேக நபரை நேற்று கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தியுள்ளனர்.

வழக்கு விசாரணை மேற்கொண்ட கிளிநொச்சி மாவட்ட நீதிமன்ற நீதிபதி ரி.சரவணராஜா குறிதத் சந்தேக நபரை 2 லட்சம் ரூபா பெறுமதியான ஆள்பிணையில் செல்ல அனுமதி வழங்கியுள்ளார்.

## 12 லட்சத்துக்கு மேற்பட்ட பி.சி.ஆர். முன்னெடுப்பு!

கொரோனா தொற்று நோயாளிகளை அடையாளம் காண இலங்கையில் இதுவரை 12 லட்சத்துக்கும் மேற்பட்ட பி.சி.ஆர் சோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

கடந்த ஞாயிற்றுக்கிழமை மட்டும் 12 ஆயிரத்து 222 பி.சி.ஆர். சோதனைகள் நடத்தப்பட்டன என சுகாதார அமைச்சின் தொற்றுநோயியல் பிரிவு அறிவித்துள்ளது.

அதன்படி கடந்த பெப்ரவரி மாதம் 18 ஆம் திகதியில் இருந்து இதுவரை நாட்டில் 12 லட்சத்து 4 ஆயிரத்து 350 பி.சி.ஆர். பரிசோதனைகள் மேற் கொள்ளப்பட்டுள்ளன.

இவற்றில் டிசெம்பர் மாதம் 11 ஆம் திகதியே அதிக எண்ணிக்கையிலான அதாவது 17 ஆயிரத்து 425 பி.சி.ஆர். பரிசோதனைகள் மேற் கொள்ளப்பட்டுள்ளன.

பி.சி.ஆர். மற்றும் அன்டிஜென் பரிசோதனைகள் மூலம் ஞாயிற்றுக்கிழமை 674 கொரோனா தொற்று நோயாளிகள் அடையாளம் காணப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

Anna EXPRESS Courier Services



அண்ணா
விரைவும் பொதிகள் சேவை
3-6 நாட்கள்
077 8889388
075 3305500
070 3305500
லண்டன் 1000/=
பிரான்ஸ் ஜேர்மனி டென்மார்க் ஹொலன்ட் 1150/=
அமெரிக்கா கனடா 1450/= (11 kg க்கு மேல்)
யாழ்ப்பாணம் சங்கானை கல்வியங்காடு ஆவரங்கால் நெல்லியடி
சங்கத்தானை பளை கிளிநொச்சி புதுக்குடியிருப்பு முல்லைத்தீவு
கனகராயன்குளம் மல்லாவி மன்னார் வவுனியா கொழும்பு

கல்யாணமாலை



வட சர்வதேச திருமண சேவை



| மணமகன் விவரம் | மணமகள் விவரம் |
| --- | --- |
| பிறந்த திகதி - 1975.05.19 | பிறந்த திகதி - 1989.01.02 |
| மதம் - இந்து V | மதம் - இந்து V |
| நட்சத்திரம் - ஆயிலியம் 3 | நட்சத்திரம் - சுவாதி |
| செவ் - 4இல் | பாவம் - 17 1/2 |
| பாவம் - 8.5 | சூ/செவ் - 10இல் |
| கல்வி - CIMA | கல்வி - MBBS |
| தொழில் - கணக்காளர் | தொழில் - Doctor |
| எதிர்பார்ப்பு - படித்த பட்டதாரி | எதிர்பார்ப்பு - Doctor & Engineer |

Kalyanamalai Vada.com தினசரி முகநூலிலும், யாழ் காலைக்கதிர் பத்திரிகையில் காலையிலும் மாலையிலும் வெளிவரும் மணமக்களை நீங்களே தெரிவு செய்து எம்முடன் தொடர்புகொள்ள நாம் திருமணத்தை நிறைவேற்றித் தருவோம். மணமக்கள் விண்ணப்பப் படிவத்தினை புத்தகக் கடைகளிலும், பத்திரிகை விற்பனை நிலையங்களிலும் வாங்கி விண்ணப்பியுங்கள், முக நூலிலும் விண்ணப்பம் உண்டு. அலுவலக நேரம் காலை 9 தொடக்கம் 5 வரை. சனி, ஞாயிறு மற்றும் போயா தினங்களில் பதிவுகளை மேற்கொள்ள முடியும். பதிவுக் கட்டணம் 1000 + 300.

க.இல - 8000661351 வர்த்தக வங்கி, பருத்தித்துறை.

உப அலுவலகம்,
சந்தை வீதி,
இமையாணன் மேற்கு,
உடுப்பிட்டி.
077 3434 415
077 8578 528

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 29.12.2020 இல் வெளியிடப்பெற்றது.